A/L 89
பிரிவு: II
ஆரம்பம் 28 - 03 - 87
விலங்கியல் – நாகநாதன்
தாவரவியல் – குகதாசன்
பௌதிகவியல் – வர்ணம்
இரசாயனவியல் – தில்லைநாதன்
தூய - பிரயோக கணிதம் – திரு நல்லையா
New Master
INSTITUTE
B.M.G. Lane, JAFFNA.

சஞ்சீவி

விலை ரூ 2/-

New Master
[INSTITUTE]
B.M.G. Lane, JAFFNA.
A/L 87 AUG.
ஒலியியல்
திரு. வர்ணம்
திங்கள் -- வெள்ளி
பிற்பகல் 3-00 மணி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

மலர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு பங்குனி மீ 7 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 றஜப் பிறை 20 (21-03-1987) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY விலை: 9

கருத்துக் கலசம்

புது நூல்கள் தமிழில் வேண்டும்

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்–

இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்.–

இவை இரண்டும் மகாகவி பாரதியாரின் பெரும் ஆசைகள்.

இப்போது இங்கு நடக்கும் நூல் வெளியீட்டு விழாக்களைக் காணும் போது, பாரதியின் ஆசை எம்மவர்க்கும் வர வேண்டும் என நினைப்பது உண்டு.

கொழும்பு சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்தினர் "எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம்" என்ற நூலின் ஆசிரியருக்கு பாராட்டு விழா ஒன்று நடத்தினர்.

தமிழ் வளர்ச்சிக்கு புதிய துறைகள் சார்ந்த நூல்கள் தேவை என்று அந்த விழாவில் வற்புறுத்தப்பட்டிருந்தது.

இது பாரதியின் இரண்டு ஆசைகளையும் ஒன்று நிரட்டிய கருத்து எனலாம்.

நாம் வாழும் உலகு வேகமாக முன்னேறி வருகிறது. நாமும் அதற்கு ஈடுகொடுத்து முன்னேற வேண்டும். எனவே பல கலைகள், பல புதிய துறைகளைக் கற்றறிந்து அவற்றைச் செயலில் இட வேண்டும்.

சுயமொழியில் கல்வி போதனை நடக்கிறது ஆகையால் புதிய துறைகள் சார்ந்த நூல்கள் தமிழில் தாராளமாக எழுதப்பட வேண்டும்.

இலக்கியமும் வரலாறும் எமக்குத் தேவைதான். மறுப்பதற்கில்லை ஆனால் அவற்றை மட்டுமே எழுதி நூல்களை வெளியிடுவதால் எமது இனம் பூரண வளர்ச்சி காண முடியாது. உலகில் ஏனைய மக்களோடு போட்டி போட்டு முன்னேற முடியாது.

விவசாயம், கைத்தொழில், தொழில் நுட்பம், விஞ்ஞானம் ஆகிய துறைகளிலும் தமிழில் நிறைய நூல்கள் எழுதப்பட வேண்டும். அத்துறையில் பாடநூல்கள் வெளியிடுவதுடன் மட்டும் நின்றுவிடலாகாது.

சாதாரண மக்களும் சராமன்யனும்-விளங்கிக் கொள்ளும் இலகு தமிழில் நவீன கண்டுபிடிப்புகளும் நூல்கள் நிறைய வெளிவர வேண்டும். அந்தத் திறமையை வளர்க்க வேண்டும்.

புதிய கண்டுபிடிப்புகள் தமிழில் எழுத முடியாது என்ற தப்பான அபிப்பிராயம் சில காலங்களுக்கு முன்னர் நிலவியது. அது தவறு என்பதும் எதையும் சொல்லும் வளமும், நிறையும் தமிழுக்கு உண்டு என்பதும் இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே புதிய துறைகளைச் சார்ந்த நூல்களை, பாடநூல்களை, பக்கத்தினை நூல்களை, உசாத்துணை நூல்களை ஆராய்ச்சி நூல்களைத் தமிழில் படைக்க அறிஞர்கள் முன்வர வேண்டும்.

இதுவரை இருந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

அரசியல் தீர்வுக்கு இந்தியா நிர்ப்பந்திக்க தமிழகம் வற்புறுத்து

சட்டசபையில் நாவலர்

சென்னை, மார்ச் 20

இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வுகாண இலங்கை அரசாங்கத்தை பலவகையிலும் இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும்

தமிழ்நாடு நிதிஅமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் நேற்று தமிழ் நாடு சட்டசபையில் தெரிவித்தார்.

பட்ஜெட்டைச் சமர்ப்பித்துப் பேசுகையில் அமைச்சர் இவ்வெண்டு சொன்னார் விடுத்தார்.

அமைச்சர் நெடுஞ்செழியன் மேலும் சொன்னதாவது:–

இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக பெரிய அளவில் மாநில அரசு உதவி புரிந்துவருகின்றது.

இதுவரை 4 கோடி ரூபா செலவில் வீடுகள் கட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழர் உயிரிழப்பதை இந்திய மத்திய அரசு நடுத்த நிறுத்த வேண்டும்

பொருளாதார முற்றுகையினால் யாழ் குடாநாட்டுக்கான பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

இப்படி அவர் சொன்னார். (உ-எ)

கோட்டையில் கிடந்து உருக்குலையும் அரச வாகனங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்களுக்குச் சொந்தமான நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் ஷெல் தாக்குதல்களினால் சேதமடைந்து பாவிக்கமுடியாத நிலைக்கு வந்துள்ளன.

யாழ் குடாநாட்டுக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்பு நடைபெற்று வந்த கூரை வாகனங்கள் கடத்தல்களுடுத்து, சகல அரச வாகனங்களையும் கோட்டையில் நிறுத்த வேண்டும் என அரசு உத்தரவிட்டது.

இதனைஅடுத்து யாழ் செயலகம் உட்பட அனைத்து அரச அலுவலங்களிலும் இருந்து பாவிக்கப்படும் நிலையிலும் பாவிக்க முடியாத நிலையிலும் காணப்பட்ட பல வாகனங்கள் அப்போது கோட்டைக்குக் கொண்டுபோய் நிறுத்தப்பட்டன.

மழையிலும் வெய்யிலிலும் கிடந்து பழுதடையும் அந்த வாகனங்கள் யாழ் கோட்டை மீது போராளிகள் நடத்தும் ஷெல் தாக்குதலினாலும் மேலும் சேதமடைந்துள்ளன. சில வாகனங்கள் ஷெல் தாக்குதலால் உருக்குலைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (அ-10)

பாக்குநீரிணையில் இந்தியக் கடற்படை உஷார் நிலையில்!

யாழ்ப்பாணம், மார்ச்21

பாக்குநீரிணையில் இந்திய கரையோரக் காவல் கப்பல்களும் கடற்படைப் பிரிவுகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் இருந்து வரும் தகவல்களே இப்படித் தெரிவிப்பதாக யாழ்நகரில் இருந்து வெளிவரும் "சற்றர்டே ரிவியூ" ஆங்கில வார இதழ் (21-3-87) செய்தி வெளிவிட்டுள்ளது.

பிரதமர் காந்தியின் சிறப்புத் தூதர் தினேஷ் சிங்கின் கொழும்பு விஜயத்திற் பின்னரே இந்தியக் கடற்படையினர் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளனர்.

பொருளாதார முற்றுகை நீடிக்குமானால் மனிதாபிமான அடிப்படையில் வடபகுதி மக்களுக்கு உணவு, எரிபொருள் முதலியவற்றை வழங்க இந்திய அரசு முயலலாம்.

இப்படி செய்திகள் செய்திகள் தெரிவிப்பதாக 'சற்றர்டே ரிவியூ' மேலும் தெரிவித்தது. (உ-எ)

புலியாய்ந்த கல்லில் புலிகள் தாக்குதல்! படையினர் பலர் பலி!!

யாழ்ப்பாணம், மார்ச் 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலியாய்ந்த கல் கிராமத்தைச் சுற்றி வளைக்க முயன்ற கொமாண்டோப் படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் போரிட்டனர்.

கடந்த புதன் கிழமை இச்சம்பவம் நடைபெற்றது

ஐநூறுக்கும் அதிகமான படையினர் நடையவனி மூலம் இக்கிராமத்தைச் சுற்றி வளைக்க, ஹெலிக் கொப்டர் மூலம் மேலதிக படைகள் அப்பகுதியில் குவிக்கப்பட்டன.

பல குழுக்களாகப் பிரிந்து நேற்றுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினரில் ஒரு குழுவை எதிர்த்த விடுதலைப் புலிகள் கடும் சண்டைநடத்தினர்.

இரண்டாரணமாக பல படையினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது

இழப்புகளுடன் பின்வாங்கிய சிப்பாய்களினால் கைவிடப்பட்ட 350 ஏ.கே ரைபிள் ரவைகள், [illegible] தொப்பிகள், ரிங் உணவுவகைகள் என்பனவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். (உ – 10)

இலங்கை விடயம்: ராஜீவ் இன்று முக்கிய முடிவு

புதுடில்லி, மார்ச் 20

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இன்று சனிக்கிழமை மிக முக்கிய முடிவு ஒன்றை மேற்கொள்வார்- இவ்வாறு இங்கு அரசுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய அரசியல் விவகார ஆலோசனைக் குழு இன்று சனிக்கிழமை பிரதமர் ராஜீவ் தலைமையில் கூடுகிறது.

அப்போது இனப் பிரச்சினை விஷயத்தில் இலங்கை அரசின் நிலை என்ன, இந்தியா என்ன செய்வது என்பது குறித்து மீண்டும் ஆராயப்படும்

ஏற்கனவே அரசியல் விவகார ஆலோசனைக் குழு இம்மாதம் பத்தாம், பன்னிரண்டாம் திகதிகளில் கூடி இலங்கை விவகாரத்தை நீண்ட நேரம் ஆராய்ந்தது.

அதனைத் தொடர்ந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஆர்ஜென்ரீனா கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

இலங்கை நிலைமை மனித உரிமைகள் ஆணைக்குழு

மனித உரிமைகள் சர்வதேசப் பிரகடனம், சர்வதேச குடியியல், அரசியல் உரிமைகள் உடன்பாடு, உலக அங்கீகாரம் பெற்ற சர்வதேச மனிதாபிமான சட்டவிதிகள் ஆகியவற்றின் வழிநடத்துதலின்படி,

14-3-1984 இல் எடுக்கப்பட்ட 1984/111 இலக்க தீர்மானத்தை மீண்டும் நினைவு கூருகின்றோம்

சித்திரவதை, காணாமற் போகச் செய்யப்படுதல் ஆகியவை சம்பந்தமாக நியமிக்கப்பட்ட செயற்குழுவின் தொகுப்பாளர் சமர்ப்பித்த அறிக்கையை கவனத்துக்கு எடுத்துள்ளோம்.

கனடா, நோர்வே நாடுகளின் ஆதரவுடன் ஆர்ஜன்ரீனாவால் கொண்டுவரப்பட்டு, பின்னர் சாம்பிய நாடுகளும் இலங்கை உட்பட ஏற்றுக்கொள்ளக் கூடியதாகத் திருத்தப்பட்டு ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இங்கு முற்றாகப் பிரசுரமாகின்றது.

1. மனிதாபிமான சட்ட விதிகளை மதித்து நடக்கும்படி எல்லா கட்சிகளையும், குழுக்களையும் கோருகின்றோம்.

2. நிர்ப்பந்தம், வன்செயல்களைக் கைவிட்டு மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்களின் அடிப்படையில் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும்படி சகல கட்சிகளையும் குழுக்களையும் கோருகின்றோம்.

3. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தீவிரமாக இணைந்து சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் முன்னேற்றத்துக்காகவும் அதைப் பரப்பும் முயற்சியிலும் ஒத்துழைக்க வேண்டும் என்று இலங்கை அரசைக் கோருகின்றோம்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க, மனிதாபிமான உணர்வுகளை நிலைநாட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவைகளைப் பெறுவது குறித்து சாதகமாக பரிசீலனை

(8ம்பக்கம் பார்க்க)

திருமலையில் 2 சம்பவங்களில் 2 படையினர் பலி; 50 பேர் காயம்

திருகோணமலை,மார்ச்21

திருகோணமலையில் கடந்த வாரம் ஆயுதப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே நடைபெற்ற இரண்டு மோதல்களில் இரண்டு சிப்பாய்கள் உயிரிழந்தனர். சுமார் 50 சிப்பாய்கள் காயமடைந்தனர்.

படுகாயம் அடைந்த சிப்பாய்கள் கொழும்பு, அனுராதபுரம் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சாதாரண காயங்களுக்குள்ளானவர்களுக்கு திருமலை கடற்படை ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது

முதலாவது சம்பவம்

சென்னியா - தம்பலகமம் வீதியில் கண்டல் காடு என்னுமிடத்தில் முதல் சம்பவம் இடம் பெற்றது.

காலை நடையாகச் சென்ற இராணுவத்தினரை எதிர்கொண்டு போராளிகள் தாக்கினர்.

இருபகுதியினருக்கும் இடையே பல மணிநேர மோதல் இடம்பெற்றது

சிப்பாய் எஸ். விக்ரமசிங்க (வயது 24) உயிரிழந்தார்;

மறுநாள் காலை மோதல் நடந்த இடத்துக்கு பெருந்திரளான இராணுவத்தினர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

இரவு நேர ஷெல்லடி: மக்கள் இடம் பெயர்வு

யாழ்ப்பாணம் மார்ச் 21

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து நள்ளிரவு நேரங்களில் மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்களினால் ஏராளமான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

அரியாலை, மணியந்தோட்டம், செம்மணி வைரவடி ஆகிய இடங்களைச் சேர்ந்த பல பொது மக்களே இவ்வாறு இடம் பெயர்ந்தவர்களாவர்.

வியாழக்கிழமையும் நாவற்குழி முகாமில் இருந்து நள்ளிரவு நேரத்தில் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஷெல் குண்டு காரணமாக அரியாலைப் பகுதியில் இரண்டு வீடுகள் சேதமடைந்தன; எனினும் உயிராபத்து எதுவும் இல்லை. (அ-10)

தனது தமிழக விஜயம் முக்கியமானது என பாலகுமார் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 21

எனது தமிழ் நாடு விஜயம் முக்கியமான தொன்றாக அமையப் போகிறது.

ஈரோஸ் பிரமுகர் திரு பாலகுமார் தமிழ் நாடு திரும்பும் முன்னர் இப்படித் தெரிவித்தார்.

அவசரமாக அவரின் தமிழ்நாடு பயணம் ஒழுங்கு செய்யப்பட்டது

பாக்கு நீரிணை ஊடாக பயணத்தை தொடர்கு வதற்கு இரண்டு கணித்தியாலங்களுக்கு முன்னர் 'சற்றர்டே ரிவியூ' ஆங்கில வார இதழ் செய்தியாளர் திரு. பாலகுமாரைப் பேட்டி கண்டார்.

'காலம் பிந்திய இந்த நேரத்தில் கூட, எம்மை அங்கீகரிக்கும்படி நாம் இந்திய அரசைக் கோருகிறோம்.

தமிழர் தாயகத்தில் இருந்து இந்தியா திரும்புகிறேன் என்பது உண்மை.

ஆனால் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக நாம் தமிழ் நாடு திரும்பவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர் நிலை பொசமடைந்து வரும் இச்சமயத்தில் பேச்சுக்கள் நடத்துவதில் அர்த்தமே இல்லை.

இப்படி திரு. பாலகுமார் 'சற்றர்டே ரிவியூ' க்குத் தெரிவித்தார். (உ-எ)

கூப்பனை விநியோகிக்க முகாம்கள் தயார்!

யாழ்ப்பாணம், மார்ச்21

எரிபொருள் கூப்பன்களை விநியோகிப்பதற்குத் தேவையான விவரங்களை யாழ் செயலகம் நேற்று சம்பந்தப்பட்ட முகாம்களுக்கு அனுப்பி வைத்தது.

விவரங்கள் கிடைத்தன என்றும்–

கூப்பன்களை விநியோகிக்க சகல ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன என்றும்--

சம்பந்தப்பட்ட முகாம்களில் இருந்து யாழ் செயலகத்துக்குப் பதில் கிடைத்திருப்பதாக தெரியவருகிறது.

இன்று காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் பலாலி, காங்கேசன்துறை ஹாபர்வியூ ஹோட்டல், யாழ் கோட்டை இராணுவ முகாம்களில் எரிபொருள் கூப்பன்கள் வழங்கப்படும். (உ-எ)

சுபநேரம்

21—03—1987
சனிக்கிழமை

சுபநேரம்:
8-18 முதல் 4-48 வரை
ராகுகாலம்:
9-18 முதல் 10-48 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேற்றுப் படையெடுப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 21

ஜீ. சீ. ச சாதாரண தர பரீட்சைக்குத்தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் யாழ் கல்வித் திணைக்களத்தை நோக்கி நேற்றுப்படையெடுத்தனர்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான முடிவுகளை பெற்றுக் கொள்வதற்காகவே அவர்கள் இவ்வாறு அங்கு படையெடுத்துச் சென்றனர்.

சுமார் 8 ஆயிரம் பேருக்குரிய பெறுபேறுகள் நேற்று கல்வித் திணைக்களத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இவற்றில் பெரும்பாலானவை நேற்றைய தினமே உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

எனினும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான

(8ஆம் பக்கம் பார்க்க)

தினேஷ் கேள்வியும் ஜே. ஆரின் பதிலும்

கொழும்பு மார்ச் 21

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கும், இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதர் தினேஷ் சிங்கிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் விவரம் என்ன?

திரு. ஜெயவர்த்தனா, தினேஷ்சிங் மூலம் அனுப்பிய தகவல் என்ன என்பது பிரதமர் காந்தியைத் தவிர வேறு எவருக்கும் இன்னும் தெரிவிக்கப்படவில்லை என்று பிரபல அரசியல் விமர்சகர் திரு. ஜி. கே. ரெட்டி எழுதியிருக்கிறார்.

இதனிடையில் இலங்கை அரசு வட்டாரங்கள் தினேஷ் சிங்கின் கொழும்பு விஜயம் பற்றி அதிக தகவல்களை வெளிவிட்டு உள்ளன.

அவை வருமாறு:

தினேஷ் சிங் 3 காரணங்களுக்காகவொழும்பு

(8ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

வேலணை மேற்கில் 14 பரப்பு தோட்டக் காணி கிணறுடனும், மின்சார வசதியுடனும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 151, கோவில் வீதி, நல்லூர்.

MARIST BROTHERS FARM கறிப்பு பேப்பர் குஞ்சுகள். வெள்ளை லேட்டுக் குஞ்சுகள் 21 ஆந் திகதி சனிக் கிழமை விநியோகிக்கப் படும். விலை 16/- முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில்.

பாவித்த விக்டோரியா பாடங்கள், அலுமாரி, கட்டில் மெத்தைகள், Hall set, Vono Spring Bed, கசற் றேடியோக்கள், Singer மெஷின், சாப்பாட்டு மேசைசெற், ஸ்ரௌல், Pyrex வகைகள், Ladies சைக்கிள், National Blender, குளிர்க் கபேட், சோல்பாக்கிடாரம், பித்தளை விளக்குகள், மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு M. தியாகராஜன், 816, பிரதான வீதி, யாழ்ப்பாணம். செல் பற்றிக் சந்தியருகில்

தேவை

யாழ் மாவட்ட தேர்தல் தொகுதி அடிப்படையில் அனுபவம் உள்ள வர்களிடமிருந்து விளம்பரம் சேகரிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன பிணைப்பணம் செலுத்தக் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் 18-3-87ஆந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விளம்பர எண் - 57, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

பண்டத்தரிப்பு பரிஷ் பல நோ.கூ. சங்கத்தில் இந்தியன் மின்றறி ஆலையில் வேலைசெய்வதற்கு பயிற்சிபெற்ற பெண் பணியாளர்கள் தேவை. துண்டு அடிப்படையில் வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலதிக விபரங்கட்கு சந்தியருகில், மின்றறி ஆலை, சங்கானை பல நோ. கூ. சங்கம், சங்கானை.

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வாடகைக்கு வீடு உடனடியாகத் தேவை யாழ்ப்பாணம், கந்தர்மடம், திருநெல்வேலி, மானிப்பாய் பகுதிகள் விரும்பத்தக்கது விளம்பர எண் 56, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

சேவை

இந்தியாவில் உயர் கல்வி பயில்வதற்கு விசேடமாக மாணவிகளுக்கு சகல ஒழுங்குகளும் நியாயமான கட்டணங்களுக்கு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். தொடர்பு: பிசினெஸ் கிறெடிற் கொம்பனி, 9, கனகசத்திர ஒழுங்கை, நாவலர் வீதி வடக்கு கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

விருப்புகள்

வெளிநாடு செல்வோர்க்கும் மற்றையோருக்கும் மிகவும் தேவையான Computer Programming Basic Language வகுப்புக்கள்-- அனைவரும் சேரலாம். குறுகியகால சிறந்த பயிற்சி- வெளிநாடுகளில் Computer களில் வேலை செய்வதற்கு ஏற்ற முறையில் பயிற்சி அளிக்கப்படும். ஆரம்பம் 23-3-1987. சலுகைக் கட்டணம் நேரில் வரவும் 'ROYAL' Computer Centre, பிரதான வீதி, மூளாய்.

பார்த்தசாரதி அணுகுமுறைக்கு மாறிவிட்டார் ராஜீவ் காந்தி!

தினேஷ் வந்ததன் அர்த்தமே அதுதான்

"தினேஷ் சிறிதிமு ரெக்று வந்தார்.

தர்மிஷ்டருடன் மூன்று மணித்தியாலங்கள் பேசினார்.

'அன்று இரவே திரும்பி, கேரளா சென்று பிரதமர் காந்தியைச் சந்தித்தார்.

'தர்மிஷ்டரின் நிலை என்ன? என்பதை ஒரு மணித்தியாலமாக பிரதமர் காந்திக்கு விளக்கினார்.

'பின்னர் புதுடில்லி திரும்பினார்'— இது செய்தி.

யார் இந்த தினேஷ் சிங்? எதற்காக அவர் திடீர் என்று தெரிவுசெய்யப்பட்டார்.

தர்மிஷ்டருக்கு அவர் கூறியது என்ன?

இவைபற்றி எல்லாம் பலவாறாக ராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படுகின்றன.

மறைந்த பிரதமர் அன்னை இந்திராவின் நெருங்கிய ஆதரவாளர் தினேஷ்சிங் இந்திரா அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராகவும் இருந்தவர். நற்சமயம் இந்திராவின் ஆதரவாளர்கள் எல்லாம் தனிணை அணுகவிடாமல் பார்த்துக்கொண்டு வருபவர் பிரதமர் காந்தி.

அப்படிப்பட்டவர் எப்படி தினேஷ்சிங்கைத் தேர்ந்து எடுத்துக் கொழும்புக்கு அனுப்பினார்?

இங்குதான் ஒன்று வெளிச்சத்துக்கு வருகிறது.

மீண்டும் திரு. பார்த்தசாரதிக்கு இலங்கை இனப்பிரச்சினை விஷயத்தில் முக்கிய பங்கு அளிக்கப்பட்டு வருகின்றது.

இச்செய்திக்கும் தினேஷ்சிங் தெரிவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று புதுடில்லிச் செய்திகள் கூறுகின்றன.

தினேஷ்சிங் வெளியுறவு அமைச்சர் பதவியை விட்ட நேரத்தில் வெளியுறவு ஆலோசகராக திரு. பார்த்தசாரதியே பணியாற்றினார்.

அப்படியானால் 'பார்த்தசாரதி அணுகு முறையை' கடைப்பிடிக்க இந்தியப் பிரதமர் தயாராகி விட்டார் என்பன்னதையே இது காட்டுகின்றது.

பார்த்தசாரதி அணுகு முறையின்கீழ் இந்திய அரசுக்கும் போராளி அமைப்புகளுக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் விளக்கமும் இருந்துவந்தன.

பண்டாரி அணுகுமுறை

எப்போது 'பண்டாரி அணுகுமுறை' தொடங்கியதோ அன்றே இந்திய அரசுக்கும் போராளி அமைப்புகளுக்கும் இடையே விரிசல்கள் ஏற்படத் தொடங்கின.

திம்புப் பேச்சுக்களில் பண்டாரி முக்கியமட்டமானதைத் தொடர்ந்து விரிசல்கள் அதிகரித்தன.

இலங்கை அரசுடன் நெருங்கிய தொடர்பை வளர்த்துக் கொண்டு, விடுதலை அமைப்புகளை ஏனோ தானோ என்று நடத்தத் தொடங்கினார் பண்டாரி

மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்று கூறுவது போல், பண்டாரி ஓய்வு பெற்ற பின்னரும் பண்டாரி அணுகு முறையையே திரு. காந்தி கடைப்பிடித்து வந்தார்.

தமிழ்ப் போராளிகள் மீது நிர்ப்பந்தம்; ஆயுதங்கள் பறிப்பு—இப்படி பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இதனால் இந்தியா தமிழ்ப் போராளிகளின் நல்லெண்ணத்தை இழந்தது; வேதனையைத்தான் சம்பாதித்தது. இந்த இழப்புக்குக் காரணம் தர்மிஷ்டரின் நல்லெண்ணத்தைப் பெற்று தமிழர் பிரச்சினைக்கு சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றை இந்தியாவினால் உருவாக்க முடிந்ததா?

கடந்த 80 ஆண்டுகளாக இலங்கைத் தமிழர் சிங்கள அரசுகளுடன் பேச்சு நடத்தி ஏமாந்தனர்.

அந்த ஏமாற்றத்தையே 4 ஆண்டு கால இராஜதந்திர நடவடிக்கையில் பின்னர் இந்தியாவினால் காண முடிந்தது.

"கதா உபதேசம்"

கடைசியாக தர்மிஷ்டர் இந்தியப் பிரதமருக்கு 'கதா உபதேசம்' செய்யத் தொடங்கியது தான் மிச்சம்.

"தமிழ்ப்போராளிகளுடன் நல்லெண்ணத்தை வளருங்கள்; இலங்கை அரசுக்கு சரியான பாடம் படிப்பியுங்கள்"- 'இந்து' போன்ற பிரபல பத்திரிகைகள் பிரதமருக்கு இப்படி இடித்துக்கூற வேண்டியதாயிற்று

அதன் பின்னர் 'டிமாஷ்' சொல்லித் தேடிப்பிடித்து தர்மிஷ்டருக்கு அனுப்பினார்.

அதன் சரியான அர்த்தம் என்ன என்பதை அறிந்து கொள்ளவோ, அல்லது அதன் அர்த்தத்தை மற்ற அரசியல் எதிரிகளுக்கும் புரியவைக்கவோ என்னவோ, சக அரசியல் கட்சித் தலைவர்களையும் அழைத்துப்பேசினார் தர்மிஷ்டர்.

அர்த்தத்தை புரியவைப்பிக்கப் பிரதமர் காந்தி, தினேஷ்சிங்கை கொழும்புக்கு அனுப்பினார்.

அர்த்தத்தை மட்டும் புரியவைக்கவில்லை தினேஷ்சிங். அணுகு முறையிலும் இந்தியாவில் மாற்றம் உண்டு என்று புரியவைத்தார் தினேஷ்சிங்.

'டிமாஷ்' சொல்லை தமாஷ் ஆக எடுக்க வேண்டாம் என்று மட்டும் அவர் சொல்லவில்லை.

தினேஷ் சொன்னது

"இலங்கைத் தமிழரின் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் கிடைக்கும் சூழ்நிலை ஏற்படும் வரை எந்த நேரத்திலும் நிவாரணம் எழுங்க இந்தியா தயாராக இருக்கிறது" -- இதை தினேஷ்சிங் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக தர்மிஷ்டரிடம் கூறி விட்டார்.

எரிபொருள், தொலைபேசித்தடைகளை நீக்கி இராணுவ நடவடிக்கையை நிறுத்தி டிசம்பர் 19 யே சங்கேளின் அடிப்படையில் பேச்சுக்களுக்குத் தயாராகும்படி இலங்கைக்குக் கூறப்பட்டு விட்டது.

'ஆம்' என்று சொன்னவர்

'ஆம்' என்று சொன்ன தர்மிஷ்டர் இன்று தொடக்கம் கூப்பனுக்கு எரிபொருள் கொடுக்கப் போகிறார்.

அப்படியானால் தடை நீக்கம் என்பது பேச்சளவிதா?

ஜனாதிபதியின் உறுதிமொழி செயல் வடிவம் பெறுகிறதா? என்று பொறுத்து இருந்து பார்ப்போம்- இப்படி இன்னை அமைச்சர் நட்வர்சிங் கூறிவிட்டார்.

நட்வர் சிங்குடன் நாமும் பொறுத்து இருந்து பார்ப்போமே! ★

அரசாங்க அலுவலகங்களில்...

சிகை

மினி பஸ் கடன் யாருக்கு?

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையினருக்கு பணம் கிடைக்கவில்லை என்பதனால் பல வேலைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது இப்பணமும் வாதாப்பு நிதிக்கு மாற்றப்பட்டுள்ளதோ எனச் சந்தேகிக்க வேண்டி உள்ளது.

* * *

சுகாதாரம்பற்றிய பல கருத்தரங்குகள் இன்று எல்லா இடங்களிலும் நடைபெறுகின்றன. தொற்று நோய்களைத் தடுப்பதற்குத் சுகாதாரப் பகுதியினர் பொதுமக்களின் உதவியை நாடுகின்றனர். ஆனால் தொடர்ந்தும் தேனீர்ச் சாலைகள் அசுத்தமான நிலையில்தான் காணப்படுகின்றன ஒருசில இடங்களில்தான் சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்கள் கடமை புரிவதைக் காணக்கூடியதாக இருக்கிறது வெளிக்கள உத்தியோகத்தர்கள் என்ற நிலைப்பாட்டில் ஒருசிலர் பொறுப்பான முறையில் கடமை புரிந்த வலறவினாலேயே சுகாதாரம் பேணப்படுவதில்லை. அவர்களை மேற்பார்வை செய்பவர்கள் இதனைக் கவனிக்கவேண்டும்.

* * *

தனியார் பஸ் சேவைக்குப் பொறுப்பான திணைக்களம் மினி பஸ் உரிமையாளர்களுக்குக் கடன் உதவி வழங்கத் தீர்மானித்துள்ளது.

கூப-உறுப்புக்கள் வாங்குவதற்கும், திருத்தங்களைச் செய்வதற்குமே கடன்பணம் உபயோகிக்கப்படவேண்டும் என்பது நிபந்தனை இக்கடன் எட்டு மாதங்களில் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். ஆனால் வாகனங்கள் ஒருவர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கும், உபயோகிப்பவர் வேறு ஒருவராக இருக்கலாம். திணைக்களத்தினர் கடன் யாருக்கு வழங்குவார்கள்?

* * *

தமிழ் மாவட்டத்திற்குப் பொறுப்பான மாவட்ட அமைச்சரின் மெய்ப் பாதுகாப்பாளர் ஒருமுறை. பிரதான வீதியொன்றில் இறக்கப்பட்டுத் தனது பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற சம்பவம் நடைநாளில் இடம்பெற்றுள்ளது. இது போன்று முன்னரும் பல சம்பவங்கள் இடம் பெற்றதாக அந்த மெய்ப் பாதுகாப்பாளர் தன்னால் அந்த மாவட்ட அமைச்சருக்குச் சேவை செய்ய முடியாதென விட்டு விலகிவிட்டாராம்.

* * *

சஞ்சீவிச் சாரலிலே..

இலக்கிய நம்பி

கதை எழுதப் பயிலுங்கள்!

இளம் எழுத்தாளர்களுக்கு எழுதும் பயிற்சி தேவை என்பது நமது இலக்கிய ஆர்வலர்களிடை வந்தாக கிளங்குகிறது

தமிழகத்தில் இளம் எழுத்தாளர்கள் கதை எழுதுவது எப்படி என்னதைத் தனால்மூலம் கற்றுமுடிகிறது

குமுதம் வார இதழின் துணை ஆசிரியர் திரு ரா. கி. ரங்கராஜன் "எவ" (எப்படிக் கதை எழுதுவது) பள்ளி நடத்துகிறார். அவர் கூறும் கருத்துக்களைப் பாருங்கள்!

"கதை எழுதுவதற்கு கடிப்படையான தேவை கற்பனை மட்டும் தான் என்று நினைப்பது தவறு ஆர்வம் கொஞ்சமும் கற்பனை கொஞ்சமும் இருந்தால் இன்னும் ஒன்று தேவை. அது தான் எழுதுவதற்கான பயிற்சி

கதை எழுதுபவர்களுக்குப் புலவர் பட்டம் அவசியம் இல்லை. ஆனால் "க்"களும், "ப்"பனும் எல்லாம் மினி பஸ் உரிமையாளர்களுக்குக் கடன் உதவி வழங்கத் தீர்மானித்துள்ளது.

கூப-உறுப்புக்கள் வாங்குவதற்கும், திருத்தங்களைச் செய்வதற்குமே கடன்பணம் உபயோகிக்கப்படவேண்டும் என்பது நிபந்தனை இக்கடன் எட்டு மாதங்களில் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். ஆனால் வாகனங்கள் ஒருவர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கும், உபயோகிப்பவர் வேறு ஒருவராக இருக்கலாம். திணைக்களத்தினர் கடன் யாருக்கு வழங்குவார்கள்?

* * *

தமிழ் மாவட்டத்திற்குப் பொறுப்பான மாவட்ட அமைச்சரின் மெய்ப் பாதுகாப்பாளர் ஒருமுறை. பிரதான வீதியொன்றில் இறக்கப்பட்டுத் தனது பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற சம்பவம் நடைநாளில் இடம்பெற்றுள்ளது. இது போன்று முன்னரும் பல சம்பவங்கள் இடம் பெற்றதாக அந்த மெய்ப் பாதுகாப்பாளர் தன்னால் அந்த மாவட்ட அமைச்சருக்குச் சேவை செய்ய முடியாதென விட்டு விலகிவிட்டாராம்.

* * *

எல்லோ போடவேண்டும் என்று தெரிந்திருக்கும் அறிவு கட்டாயம் வேண்டும்.

பண்டித நடைக்கும் போய்விடாமல், அதே சமயம் இலக்கணப் பிழையில்லாமலும் எழுதவேண்டும்.

கதைக்குக் கரு எங்கேயும் கிடைக்கும், உப்பு, புளி கட்டாயமும் செய்திதான் தன்னடப் படியுங்கள். அதிலும் ஒரு முனையில் ஒரு கதைக்கான செய்தி காத்திருக்கும்.

புதிதாக எழுதுபவர்கள் பத்திரிகைகளுக்கு ஏற்ற மாதிரி எழுத வேண்டும். ஐம்பது சதவீதம் நன்றாக அமைந்தாலுங்கூட கதையைத் திருத்தினாலாவது பிரசுரிக்க முயல்வார்கள்".

—இப்படி திரு. ரங்கராஜன் இப்பயிற்சியற்றி விளக்குகிறார்.

நமது இளம் எழுத்தாளர்கள் இவற்றைக் கருத்திற்கொண்டு தமது படைப்பாற்றலை வளர்க்கவேண்டும். ★

ராஜீவின் பலத்தைப்பரீட்சிக்கும் குட்டிப் பொதுத்தேர்தல்

திங்களன்று 3 மாநிலங்களில் வாக்குப் பதிவு

கேரளம், ஜம்மு காஷ்மீர், மேற்கு வங்காளம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் நாளை மறுதினம் அதாவது எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்தல்கள் நடைபெற உள்ளன.

அதே தினம் பாண்டிச்சேரி, உத்தரப் பிரதேஷ், ஆந்திரப் பிரதேஷ், குஜராத் மாநிலங்களில் 3 லோகசபைத் தொகுதிகளுக்கும் 8 சட்டசபைத் தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெறும்.

இவ்வருடம் பிரதமர் ராஜீவ் காந்தியின் அரசியல் செல்வாக்கைப் பரீட்சிக்கும் முதலாவது களமாக இத்தேர்தல்களை அவதானிக்க கருதுகின்றனர்.

உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஏற்கனவே பல நெருக்கடிகளை எதிர்நோக்கி உள்ள இந்திரா காங்கிரஸ் இத்தேர்தல்களில் வெற்றி பெறும் முயற்சியில் முழு மூச்சாக இறங்கி உள்ளது.

இளைஞர்கள் பலர் வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இரண்டு நடவடிக்கை மேல் பதவி வகித்த பலருக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்படவில்லை.

திங்களன்று நடைபெறும் தேர்தல்களில் 4 கோடி மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மொத்தம் மூவாயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். எல்லாமாக 510 சட்டசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இந்தியாவைப் பொறுத்தவரை இதனை ஒரு குட்டிப்பொதுத் தேர்தல் என்றே கூறலாம்.

சட்டசபைத் தேர்தல்கள் நடைபெற உள்ள மூன்று மாநிலங்களிலும் கேரளத்திலும், ஜம்மு காஷ்மீரிலும் பிரதேசக் கட்சிகளுடன் சேர்ந்து இந்திரா காங்கிரஸ் கூட்டணி நடத்தி வந்தது.

மேற்கு வங்காளத்தில் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் வலுவான ஆட்சி இருந்து வந்தது.

கேரளம்

ஏற்கனவே தமிழ் நாடு, ஆந்திரப்பிரதேஷ், கர்நாடகம் ஆகிய மாநிலங்களைக் கோட்டை விட்ட இந்திரா காங்கிரஸ் கேரளத்தில் எப்படியாவது மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதில் முனைப்பாக ஈடுபட்டு வருகிறது.

கேரளத்தை இந்திரா காங்கிரஸ் கோட்டை விடுமானால் இந்தி பேசும் மாநிலங்களில் மட்டும் இந்திரா காங்கிரஸ் என்ற நிலை ஏற்பட்டு விடும்

இந்திரா காங்கிரஸின் தேசியத் தன்மைக்கும் இது களங்கத்தை உண்டு பண்ணி விடும்.

கேரள தேர்தலில் வழமைக்கு மாறாக இம்முறை மூன்று பிரதான கூட்டணிகள் போட்டியிடுகின்றன.

1. இந்திரா காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி.

2. மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடது சாரி ஜனநாயக முன்னணி.

3. பாரதிய ஜனதா-இந்து முன்னணி.

கடந்த 5 வருடம் கேரளத்தில் ஆட்சியில் இருந்த இந்திரா காங்கிரஸ் கூட்டணி இம்முறை பெரும் சிரமத்திற்கு மத்தியில் மதச்சார்பற்ற ஜனநாயக முன்னணியுடனும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடது சாரி ஜனநாயக முன்னணியுடனும் போராடி கொண்டிருக்கிறது.

பெரும் சலுகைகளை வழங்கி இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கையும் கூட்டணியில் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

636 மலையாளப்படங்களில் நடித்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துக் கொண்ட பிரபல மலையாள நடிகர் பிரேம் நஸீரும் கேரளத்தில் இந்திரா காங்கிரஸுக்கு ஆதரவாகக் களத்தில் இறங்கி உள்ளார்.

1982 ஆம் ஆண்டுத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 48.23 சதவீத வாக்கு பெறும் சிரமத்திற்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடது சாரி ஜனநாயக முன்னணிக்கு 47.24 சதவீத வாக்குகளும் கிடைத்திருந்தன.

இம் முறை மூன்றாவது சக்தியாக பாரதிய ஜனதா-இந்து முன்னணியும் போட்டியிடுவதால் கேரள தேர்தலில் வெற்றி பெறும் கூட்டணி சொற்ப பெரும்பான்மையுடனேயே ஆட்சியைக் கைப்பற்றும் வாய்ப்பு இருந்து வருகிறது.

எந்தவொரு கூட்டணியாவது அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறுமேயானால் 1965ஆம் ஆண்டில் ஏற்பட்டது போன்று கேரளத்தில் மீண்டும் ஜனாதிபதி ஆட்சியே அமுலுக்கு வரலாம்.

இந்திரா காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியில் உள்ள முஸ்லிம்—கிறிஸ்தவர்களின் செல்வாக்குக்கு எதிராக இந்துக்களின் செல்வாக்கைத் திரட்டி பாரதிய ஜனதா--இந்து முன்னணி நிறுவப்பட்டதால் இந்த கூட்டணியும் தேர்தலில் கணிசமான ஆதரவைப் பெற வாய்ப்பு இருப்பதால் கூட்டணி [illegible]

எனினும் நேரு மோதல் இந்திரா காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இடது சாரி ஜனநாயக முன்னணிக்கும் இடையிலேயே இருக்கும் என்று நம்பப்படுகிறது.

ஜம்மு-காஷ்மீர்

பிராந்தியக் கட்சிகளுடன் பிரதமர் ராஜீவ் காந்தி செய்துகொண்ட உடன்பாடுகளின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது என்பதற்கு திங்கள் நடக்கும் தேர்தலில் வெற்றி வாகைசூடி ஜம்மு -காஷ்மீரில் ஆட்சி அமைக்கப்போகும் தேசிய மாநாடுக் கட்சி இந்திரா காங்கிரஸ் கூட்டணி எடுத்துக்காட்டாக அமையப் போகிறது.

அந்த களவுக்கு இந்த கூட்டணியின் வெற்றி நிச்சயப்படுத்தப்பட்டு விட்டது

பிராந்தியக் கட்சிகளுடன் செய்து கொண்ட கூட்டணி உடன்பாடுகளின் அடிப்படையில் ஏற்கனவே பஞ்சாப், அஸாம், மிஸோராம் ஆகிய மாநிலங்களில் தேர்தல்கள் நடைபெற்றன.

இத்தேர்தல்கள் இந்திரா காங்கிரஸுக்கு தோல்வியாக மாறி முடிவடைந்தன.

தற்போது ஜம்மு-காஷ்மீரில் ஏற்பட்டுள்ள கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும். எனினும் தொடர்ந்து நிலைக்குமா? என்

(5ஆம் பக்கம் பார்க்க)

லங்கா உலா

என்.பி. சீலன்

31ஆம் நாள் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்: 30-12-1963

மறைவு: 21-02-1987

கிருஷ்ணபிள்ளை கலைச்செல்வன்

எங்கள் குடும்ப ஒளிவிளக்கான கலைச்செல்வனின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்கள், அஞ்சலி வெளியிட்டவர்கள், மலர்களையும், மலர்மாலை, மலர்செண்டுகள், மலர்கள் சாத்தியவர்கள், இரங்கல் உரை நிகழ்த்தியவர்கள், ஏனைய உதவிகள்புரிந்தவர்கள் ஆகியோருக்கு எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அத்துடன் 23-3-1987 திங்கட்கிழமை எமது வீட்டில் நடைபெறும் வீட்டுக் கிரியையுடன் கூடிய வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அன்னார்கள் அனைவரையும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அன்புத் தந்தை, தாய், சகோதரர்கள், தம்பி, தங்கைகள்.

வண். மேற்கு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பள்ளி கொள்ளுகின்ற பரந்தாமனுக்கு

ஆசியாவில் அதி உயர்ந்த ராஜகோபுரம்

மதுரை மாநகருக்கு அடுத்த பெரிய நகர் திருச்சிராப்பள்ளி.

மூன்று சிரசையுடைய வளுகிய 'திரிசிரன்' என்னும் அரக்கன் பூசித்தமையால் இந்த இடத்திற்குத் திரிசிராப்பள்ளி என்னும் பெயர் சூட்டப்பட்டது.

இதனைத் தக்ஷிண காசி எனவும் அழைப்பர்.

இங்கு ஒரு பெரிய மலை உண்டு மலை உச்சியில் உச்சிப் பிள்ளையார் கோயில் இருக்கிறது. அங்கிருந்து பார்த்தால் திருவானைக்கா, ஸ்ரீரங்கம் ஆகிய தலங்களின் கோபுரங்களும், காவிரி ஆறும் கொள்ளிடநதியும் தெரியும்.

திருச்சிராப்பள்ளிக்குச் செல்பவர்கள் ஸ்ரீரங்கம் ஆலயத்தைத் தரிசிக்காமல் வருவதில்லை.

வரலாறு

இலங்கையை வென்று அயோத்திக்குத் திரும்பிய இராமபிரானின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக விபீஷணனுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. விழாவுக்கு வருகைதந்த விபீஷணனுக்கு இராமபிரான் ஓர் அன்பளிப்பைக் கொடுத்தார்.

அதுபள்ளி கொள்ளும் பெருமாள் சிலையாகும். அந்தச் சிலையை எடுத்து வந்த விபீஷணன் காவிரி நதிக்கும் கொள்ளிடநதிக்கும் இடைப்பட்ட பீடபூமியில் வந்து தங்கிய போது அந்தப் பெருமாள் அங்கேயே நின்றுவிட்டார்.

> இம்மாதம் 25 ஆம் திகதி ஸ்ரீரங்கம் ராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறவிருந்தது ஆனால் திடீரென ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

ஸ்ரீரங்கம் ஏழு விதங்களாக கொண்டதாய் 156 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இவ்வாலயம் 400 ஆண்டுகளுக்கு முன் சிதைவுற்றதாக மீண்டும் கோபுரங்களை அமைக்கப் பக்தர்கள், மன்னர்கள் முன்வந்தனர்

(தொடர்ச்சி - மேற்கு -

ராஜகோபுர கும்பாபிஷேகம்

வடக்கு ஆகிய திசைகளிலிருந்து மூன்று கோபுரங்களும் கட்டி முடிக்கப்பட்டபின்னர் தென்திசைக் கோபுரத்தை ராஜகோபுரமாகத் திட்டமிட்டு அத்திவாரமிட்டனர். அப்போது அக்கோபுரத்தைக் கட்ட வேண்டாமென்று ஒரு தேவ வாக்குக் கிடைத்தது. அதனால் அவ்வேலை நிறுத்தப்பட்டது.

கடந்த 400 ஆண்டுகளாக மொட்டைக் கோபுரமாக இருந்த இந்த ராஜகோபுரம் விரைவில் ஆசியாவின் அதி உயர்ந்த நெட்டைக் கோபுரமாக விளங்கி மஹா சம்ரோக்ஷணம் செய்யப்படும்

இவ்வாலயத்தின் ராஜகோபுரம் 236 அடி உயரமானது கோபுரத்தில் 13 அடுக்குகள் இருக்கின்றன. இக்கோபுரத்துக்கு 40 அடி அகலமான அத்திவாரம் கருங்கல்லினால் 400 ஆண்டுகளுக்கு முன் வரை போடப்பட்டது பதின்மூன்று அடுக்குகளும் நன்கு திட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ளன.

மேலடுக்கு 97 அடி நீளம் 36 அடி அகலம் கொண்டது.

லிப்ட் வசதி

பக்தர்கள் மேலே செல்வதற்காகப் படிக்கட்டுகளும் லிப்ட் வசதியும் செய்யப்பட்டுள்ளன. ராஜகோபுரத்தின் உச்சியில் 13 கலசங்கள் இருக்கின்றன ஒவ்வொன்றும் 10½ அடி உயரமும் 5 அடி 1½ அங்குல விட்டமும் கொண்டவை நூற்றிருபது கிலோ நிறையுள்ள செப்புத் தகடினால் ஒவ்வொரு கலசமும் உருவாகியுள்ளது.

தங்கமுலாம் பூசியுள்ள இக்கலசங்கள் சூரிய ஒளிபட்டு பல மைல் தூரத்திற்குத் தகதகவெனப் பிரகாசித்த வண்ணம் காணப்படுகிறது

நூற்றிஎட்டு வைஷ்ணவ புனித ஸ்தலங்களில் அதிசிறந்த ஸ்தலம் ஸ்ரீரங்கம் எனக் கருதப்படுகிறது இதனால் 'பெரிய கோயில்' எனவும் அழைக்கப்படுகிறது.

> 400 ஆண்டு கால வரலாறு காணாத அற்புதம்

இவ்வாலயத்திற்குப் 14 கிராமங்கள் அக்கால மன்னராக நன்கொடையாக வழங்கப் பெற்றன. தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடக மாநில மக்களும் முதலமைச்சர்களும் இக்கோபுரம் கட்டி முடிக்கத் தம்மாலான வற்றை மனமுவந்து செய்தனர்

இவ்வாலய ராஜகோபுர சம்ரோக்ஷணம் விரைவில் நிகழும்போது உலகின் பலபாகங்களிலிருந்தும் சுமார் 10 லட்சம் மக்கள் ஸ்ரீரங்கத்தில் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது

இன்று வரும் பக்தர்களின் பாதுகாப்பிற்காக 5,500 பொலீஸார் கடமையாற்ற இருக்கின்றனர். மருத்துவர் குழுக்கள் நான்கு பகுதிகளாக 24 மணி நேரமும் சிகிச்சையளிப்பர். ஒரு வாரத்திற்கு திருச்சி நகரப் பாடசாலைகளுக்கும் விடுமுறை தினமாகும்.

தமிழகத்தையே பக்தி வெள்ளமாக்கும் இவ்ஆலய சம்ரோக்ஷணம் மிக நீண்ட காலத்திற்பின்னர் நடைபெறும் தனிச்சிறப்பு வாய்ந்த தொன்றாகும். ★

சமயம் விலை போவது

ஆபத்தான விடயம்

சைவசமயம் ஆன்மாவின் மதம். இது யாராலும் கண்டுபிடிக்கப்பட்ட மதமன்று இது ஓர் அருமையான சமயம் என்பதாகும். இந்தத் தொழில் நுட்ப யுகத்திலே, அநேக அமைப்புகள் சைவத்தை அழிப்பதற்குப் போதனை பெற்றுள்ளன. முதலாவது செயல் எங்கள் சமயத்தை ஏனைய செய்வது இரண்டாவதாக ஆலயங்களிலிருந்து பூசகரை வெளியேறத் தூண்டுவது மூன்றாவதாக இல்லங்களை விட்டு மனிதர் வெளியுலகில் வேலை செய்ய ஊக்கமளிப்பது. இவற்றை யடுத்து இலகுவில் சாதிக்கக்கூடிய நான்காவது அம்சம் வருகிறது, இதுதான் 'இந்துவை விலைக்கு வாங்கும் திட்டம்'

எமது சைவ சமயம் மறுபிறப்புக் கோட்பாட்டில் நம்பிக்கையுள்ளது. கன்மத்திலும் தர்மத்திலும் நம்பிக்கை வைப்பது. எமது சமயம் நிரந்தர நரகத்தில் நம்பிக்கை வைப்பதில்லை. மற்றவர்கள் தங்கள் தங்கள் சமயம் சரியான தென்றும் எங்களது சமயம் பிழையென்றும் நம்புகின்றனர் அவர்கள் உங்கள் வீடுகளுக்கு வந்து உங்கள் மனதை சைவ தர்மத்திலிருந்து மாற்ற முயற்சிப்பர். உங்களைத் தங்கள் கட்டத்திற்கு அழைப்பர் சுவர்ச்சியான மதநூல்களையும் படங்களையும் அன்பளிப்புச் செய்வர் தமது மதக் கருத்துக்களை உடம்பில் துன்பம் ஏற்படுவதை இலகுவில் குணப்படுத்தலாம். ஆனால் ஒருவரின் உள்ளத்தில் புகுத்தப்பட்ட மதசம்பந்தமான தப்பெண்ணத்தை அகற்றுவது கஷ்டமாகும். உள்ளத்தில் உண்டான நோயைக் குணப்படுத்துவது மிகச் சிரமம்.

> சமயம்

எனவே, சைவநூல்களுக்கு, சைவதர்ம போதனையைத் தவிர வேறொன்றையும் காதில் போடாதீர்கள்.

உங்களிடம் யாரும் புறமதங்களைப் பற்றிப் பேச வந்தால் "சைவ சார்பான பிரசாரக் காட்சிகளை ஒளிபரப்புவர். நம் முன்னோரவிந்த அருஞ் செல்வமாகிய சைவதர்மத்தை அழிக்கும் நிழ்ச்சி நிரல்களே இவை:

பல பல நடவைகளில் சைவர்கள் இலவசக் கல்வியளிக்கப்பட்டும், வேறு சலுகைகளாலும் பிறமதத்தவராக் கொள்வனவு செய்யப்படுகிறார்கள். சிறுவர் சிறுமியரிக் பிஞ்சு உள்ளங்களைத் தேடி மனமாற்றத்தை உண்டுபண்ணுகிறார்கள்.

இந்தச் சூழ்ச்சி வலையிலே சிக்கி, உங்கள் தூய உள்ளத்தை அழிக்க இடங்கொடாதீர்கள். சமயத்தில் நீங்கள் சொல்வதெல்லாவற்றிலும் மேலான அநேக அம்சங்கள் உண்டு. எனவே புதுமையாக அறிய வாதமில்லை. மிகுந்த நன்றி. சென்று வாருங்கள்" என்று முற்றுப்புள்ளி வையுங்கள்.

தொகுப்பு:
ச. சிவபாலசிங்கம்

சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் அருளுரையிலிருந்து

அமெரிக்க- பாக் - சீன

அச்சாணியில் சுழலும் இலங்கை!

இந்திய சந்தேகத்துக்கு அத்திவாரம்!!

> "அக்கறை கொண்ட அலைவன்" — என்ற தலைப்பில் "பார் சன்டர்" இதழொன்றில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது

- 1983 ஜூலை இனக் கலவரத்தைத் தொடர்ந்து சுமார் ஒருலட்சம் தமிழ் அகதிகள் தமிழ்நாடு சென்றனர்.

இலங்கைத் தமிழ் போராளிக் குழுக்களும் தமிழ்நாட்டை தஞ்சம் அடைந்தனர். இலங்கைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் நாட்டில் வாழத் தொடங்கினர்.

இந்த நடவடிக்கைகளினால் இலங்கை இனப் பிரச்சினை வெளி உலகப் பிரச்சினையாயிருந்தது.

இந்த நிலையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அறிவித்தார். தீர்வுகாண தனது நல்லெண்ண உதவிகளை வழங்க இந்திராகாந்தி முன்வந்தார். இதை மறுக்க முடியாத நிலை இலங்கைக்கு ஏற்பட்டது

இதன் மூலம் இலங்கையின் இன யுத்தத்தில் மத்தியஸ்தப் பதவியை இந்தியா பெற்றுக் கொண்டது

இதைத் தொடர்ந்து இலங்கையும் இந்தியாவும் மோதிக் கொள்ளக் கூடியதான இரண்டு விஷயங்கள் உருவாகி விட்டன.

முதலாவது, புதுடில்லியால் தமிழ்ப் பிரிவினைவாதிகளை ஏற்றுக் கொள்ள வைக்கக்கூடிய பிராந்திய கமாட்சி யோசனையை ஏற்றுக் கொள்ளக்கூடிய இணக்கமான நிலைக்கு ஆளும் யு. என். பி. கட்சி வர முடியாமல் உள்ளது.

இதற்குக் காரணம் சிங்கள பௌத்தர்களின் பாதுகாவலான ஆளும் கட்சியின் எதிர்ப்பு ஆகியன ஆகும்

இதனால் 3½ ஆண்டு கால மத்தியஸ்தின் பின்னர் இலங்கை அரசின் உறுதி, அதன் உண்மையான போக்கு எது என்பன குறித்து புதுடில்லிக்கு சந்தேகம் ஏற்பட்டு விட்டது.

இரண்டாவது பிரச்சினை, சிநேக ஆயுத நாடான இலங்கையில் இந்தியாவுக்கு எதிரான நாடுகளின் துணையுடன் இராணுவ நடவடிக்கைகள் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு வருவதே ஆகும்.

இந்தியாவுடன் எல்லைப் பிரச்சினையில் மோதும் சீனாவிடம் இருந்து இலங்கை ஆயுதங்களைப் பெறுகின்றது.

தென் ஆபிரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜேர்மனி, இஸ்ரவேல் ஆகிய நாடுகளும் ஆயுத உதவிகள், இராணுவ ஆலோசனைகள் வழங்குகின்றன.

இலங்கையில் பாகிஸ்தானியர்கள் இருப்பது தான் இன்னும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்கக்கலிப்படைகள் இலங்கையில் செயல்படுவதாக இந்தியாகுற்றஞ்சாட்டியது.

இலங்கை முற்றாக மறுத்தது ஆனால் சோவியத் தலைவர் கோர்ப்பச்சேவ் கடந்த டிசம்பரில் மேற்கொண்ட விஜயத்துடன் மாஸ்கோவுடனான இந்திய உறவு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ★

> யாழ்ப்பாண மக்களைப் பீடித்துவரும் சிரங்கு வியாதியிலிருந்து விடுதலைபெற சில வழிமுறைகளை இங்கு தருகின்றோம் சிகிச்சை சம்பந்தமாக சகலரும் அறிந்திருப்பது காலத்துக்கு ஏற்றதாகும்

சிரங்கு ஒரு சமூகப்பிரச்சினை;

தடுக்க விழிப்புணர்வு அவசியம்

தற்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் சிரங்கு ஒரு முக்கிய சுகாதாரப் பிரச்சினையாக காணப்படுகிறது. நெருக்கடியான சூழலில் சமூக பொருளாதாரப் பாதிப்புக்குள்ளானவர்கள் மத்தியில் கூடுதலான தாக்கத்தை இந்நோய் ஏற்படுத்தியிருக்கிறது.

தனிநபர் சுத்தம் சம்பந்தப்பட்டதாகவும் சிரங்கு ஒரு நோயாளியிலிருந்து மற்றொரு சுகதேகிக்கு தொற்றுமூலம் பரவுகின்றது.

"சாக்கோப்ரிஸ் ஸ்கேபி" (Sarcoptis-Scabie) எனும் ஒருவகை ஒட்டுண்ணி மூலம் இந்நோய் பரவுகின்றது. இவ்வொட்டுண்ணியைச் சாதாரணமாகக் கண்ணால் பார்க்கமுடியாது;

இந்நோய் எவ்வயதினரையும் பீடிக்கும் ஆனால் குழந்தைகளே கூடுதலாகப் பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.

பரவும் விதம்

நோயாளியின் தோல் சுகதேகியின் சருமத்தில் முட்டுதல், சேர்தல் காரணமாகநோய்த்தொற்று நிகழ்கின்றது

பொதுவாகச்சிரங்கினால் பாதிக்கப்பட்டவருடன் சேர்ந்து ஒரு கட்டிலில் நித்திரை செய்வதன் மூலம் இந்நோய் பரவுகின்றது. அத்துடன் ஆண்-பெண் சேர்க்கையின்போது ஏற்படலாம்.

நோய் தொற்று ஏற்பட்டு இரு வாரகால இடைக்காலத்தின் பின்பே தோலில் கடி தொடங்கும் ஆரம்பத்தில் சிகிச்சையளிக்காத நிலையில் கொப்புளங்களில் சீழ் உண்டாகி அது பின்னர் புண்ணாக மாறும்.

பாதிப்புக்குள்ளாகும் இடங்கள்

மெல்லமையானதும் கருக்கமடைந்ததுமான தோல்-விரல் இறை, மணிக்கட்டு, முன்னங்கை, கமக்கட்டு, இடுப்பு, தொடை முதலியன ஆண்களில் ஆண்குறியும் பாதிப்புக்குள்ளாகும். பெண்களில் முலைக்காம்பு, அடிவயிறு பாதிக்கப்படநேரிடலாம். சிசுக்களிலும், குழந்தைகளிலும் அவர்களின் உள்ளங்கை, உள்ளங்கால், தலை முகம் முதலிய அவயவங்களும் பாதிக்கப்படலாம்.

சிகிச்சை

குறிப்பிட்ட பிரகாரம் சிகிச்சையளிப்பின் முற்றாக இந்நோயைக் குணப்படுத்தமுடியும்.

நோய் பூரணமாகக் குணமடையாதிருத்தல், அல்லது மீண்டும் உண்டாதல் திருப்திகரமாகப் போதிய சிகிச்சை பெறவில்லை என்பதையே காட்டும்.

பீ.பீ. கிறீம் (Benzyl Benzote Cream) ஒரு விதம் காமா பென்சீன் ஹெக்சோகுளோரைடுட், சல்பர் தயாரிப்பவைகள் முதலியவைகள் தற்போது பாவனையில் உண்டு. பீ.பீ கிறீம் மிகவும் பாதுகாப்பானது. அத்துடன் சிறந்தமுறையில் குணமாக்கவல்லதும் எனக்குறிப்பிட முடியும்.

முதலாம் நாள்:-

நோயினால் பீடிக்கப்பட்டவர் வெந்நீரில் சவர்க்காரம் இட்டுக் குளித்தல் வேண்டும். ஒரு பிரஷ் மூலம் கழுத்துக்குக்கீழ் உள்ள அவயவங்கள் யாவற்றிற்கும் பீ.பீ கிறீம் பூசப்படல் வேண்டும். நன்றாக உலர்ந்தபின்பே ஆடைகள் அணிதல் வேண்டும்.

இரண்டாம் நாள்:-

(24 மணித்தியாலங்களின் பின்பு) முதல்நாள் பூசியது போன்று உடல் பூராகவும் பீ.பீ. கிறீம் பூசப்படல் வேண்டும் இரண்டாம் நாளும் குளித்தல் கூடாது.

மூன்றும் நாள்:-

(இரண்டாம்முறை பூசி 24 மணித்தியாலங்களின் பின்பு) நோயாளி குளித்தல்வேண்டும். நோயாளி பாவித்த துணி, பாய், தலையணை, ஏனைய பொருட்கள் சுடுநீரில் அவித்தல் வேண்டும். தோய்த்து உலர்த்த ஆடை அணிதல்வேண்டும்.

சிகிச்சை அவித்த அடுத்த இருதினங்கள் சொறி-கடி இருக்கமுடியும் ஆனால் காலக்கிரமத்தில் அவை குறைந்து விடும்.

ஒருவைத்திய ஆலோசனையின் பேரிலேயே சிகிச்சை மேற்கொள்ளப்படல் வேண்டும். குறிப்பிட்ட பிரகாரம் ஆரம்பத்தில் சிகிச்சையளிப்பின் நோய் உடன் குணமடையும்.

ஆனால் அநேகமான மக்கள் மத்தியில் இந்நோய் பல வாரக் கணக்கில், (சிலவில் மாதக் கணக்கில்)குணமடையாதிருக்கின்றது இதற்குக் காரணம் என்ன?

காரணங்கள்

1. சிரங்கினால் பாதிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

டாக்டர் என். கனகசபை

பிரதேசிய சுகாதாரப் பணிப்பாளர் யாழ்ப்பாணம்.

> சர்வதேச விடிவுக் குழு இலங்கை இனப் பிரச்சினை குறித்து அமெரிக்கா, கொள்ளஞ்சக நகரில் அண்மையில் ஒருத்தரங்கை நடத்தியது.
>
> மோதலா? இணக்கமா? என்ற தலைப்பில் அவேபரி பிரபு அக்கருத்தரங்கில் பேசியதன் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.

மாகாண சபை உகந்ததல்ல

தமிழர் ஏற்கக்கூடிய குறைந்த தீர்வு

தாயகம் மூலமான அதிகாரப் பரவலே

'பராக்கிரமபாகுவை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்'—

இலங்கையில் உள்ள ஒவ்வொருவரும் விளங்கக்கூடிய கூற்று இது.

கிறிஸ்துவுக்குப் பின்னர் 10, 11 ஆம் நூற்றாண்டுகளில் அனுராதபுரத்தைத் தமிழர்களிடமிருந்து மீட்டு எடுத்த சிங்கள மன்னன்தான் பராக்கிரமபாகு.

எனது தமிழ் நண்பர் ஒருவர் இன்னொன்றையும் நினைவூட்டினார்

'2,000 ஆண்டுகளுக்கு முன்னர் நீலில் இருந்து தமிழரைத் துரத்திய

அவேபரி பிரபு

விக்ரமசிங்க 'பெக்பாக்ட்'டுக்கு விஜயம் செய்து விட்டு வந்து சொன்னார்.

இலங்கை, வட அயர்லாந்து நாடுகளில் உள்ள பெரும்பான்மை இன மக்கள் மனதில் சிறுபான்மையினருக்கிருக்கிய

அவர்கள் மறந்து விட்டார்கள்'— இதுதான் அந்த நினைவூட்டல்.

வட அயர்லாந்து

வட அயர்லாந்து, இலங்கைப் பிரச்சினைகளுக்கு இடையேயான ஒற்றுமையைக் காணஞ் சென்ற பிஷப் லக்ஷ்மன்

தட்டைமுனு மன்னனை

ஐரிஷ் குடியரசில் பெரும்பான்மையான கத்தோலிக்கர்கள், தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களினால் உருவாகும் பயமுறுத்தல்களே அத்தாக்கங்கள்.

சைப்பிரஸ்

சைப்பிரஸ் பிரச்சினையும் இதை வலியுறுத்துகின்றது. சைப்பிரஸில் உள்ள துருக்கியர்கள் தங்கள் கோரிக்கைகளை முன் எடுத்துச் செல்ல இராணுவ அதிகாரபலத்தை எதிர்பார்த்தனர். கடைசியில் அப்படியே நடந்தது.

சைப்பிரஸிலும் மக்கள் இன மத ரீதியில் பிரிந்து வாழ்கின்றனர். ஆயுதப் போராட்டத்தையே அவர்களும் விரும்புகின்றனர்.

சைப்பிரஸ்-துருக்கும் இலங்கைக்கும் உள்ள பெரிய வித்தியாசம் இதுதான்.

தனது மக்களைக் காப்பாற்றுவதற்காக துருக்கி சைப்பிரஸில் தலையிட்டது. இதனால் இழப்பதற்கு எதுவும் இல்லை என்று துருக்கி நினைத்து செயற்பட்டது இது சரியானதே.

துருக்கி

1974 இல் நடந்த இந்த [illegible] விட்டது. இப்போது ஐரோப்பிய பொருளாதார சமூக அமைப்பில் சேர துருக்கி முயற்சிக்கிறது

துருக்கி போன்று நடவடிக்கையில் ஈடுபடுவது இயலாது என்று இந்தியா ஈழம் வாதிகளுக்குக் கூறி வருகிறது. காரணம் உண்நாட்டுப் பிரச்சினையே பிரச்சினையின் முக்கிய அம்சம் ஒன்று குறித்து இந்தியா எப்மை வழி நடத்தகின்றது.

இந்தியா

இந்தியா ஒரு சமஷ்டி நாடு பல இனமக்கள் [illegible] வாழ்கின்றனர் ஒவ்வொரு இனமும் தனது கலாசார, மொழி தனித்தன்மையைக் காப்பாற்ற சுதந்திர நாடு வேண்டும் என்று கூறும் உணர்ச்சிவசப்பட்ட இந்தியாவில் இன்று.

இலங்கையில் சமதிர ணைய உரிமையைத் தமிழர் கோருகின்றனர். பொருளாதார புவியியல் அரசியல் ரீதியான யதார்த்த நிலைகளை கவனியாது 'மினி மாநிலம்' ஒன்று நிறுவப்படவேண்டும் என்பதே தமிழரின் நிலைப்பாடு.

அரசாங்கத்தினாலோ, 'பைய'ன்களாலோ நடத்தப்படும் ஒவ்வொரு வன்செயலின் முடிவிலும் இரண்டு இனங்களுக்கும் இடையே குரோதம் தான் மேலும் வலுவடைகின்றது; இணக்கம் காணப்படும் வாய்ப்புக் குறைந்து வருகிறது.

"எப்படி இவர்களுடன் நாம் வாழ்வது—" —இப்படி ஒரு தமிழர் கேட்டார்.

இழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர் கிராமங்களில் இராணுவத்தினர் செய்த அக்கிரமச் செயல்கள் பற்றி விவரித்த பின்னர் அத்தமிழர் இக் கேள்வியை எழுப்பினார்.

அந்த நேரத்தில் சிங்களவர் மத்தியில் இன்னொரு நிலை வலுவடைகின்றது அது வருமாறு;

'தீவிரவாதிகளுடன் பேச்சுக்கள் நடத்த முடியாது அவர்களை இராணுவ நடவடிக்கை மூலம் நசுக்கி ஒடுக்க வேண்டும்'—

நம்பிக்கை தருவது

இருள் சூழ்ந்த இந்நிலையில் நம்பிக்கை தருவது இரண்டு தரப்பினரும் தங்கள் நிலைப்பாட்டை மாற்றாத நிலையில் இருந்து கொண்டு பேச்சுக்கள் நடத்த முன்வந்தமையே

மற்றப் பக்கத்தில் தமிழ்த் தீவிரவாதக் கட்சி அபாயகரமான விளையாட்டில் இறங்கியுள்ளது.

எந்தப் பேச்சுக்களிலும் இரண்டு பெரிய பிரச்சினைகள் சமாளிக்க வேண்டியுள்ளது

தமிழ் மக்கள் இறைமையுள்ள தனிநாடு என்ற தீர்வுக்குக் குறைவாக இறங்கி வந்தாலும் மத்திய அரசினால் எக்காலத்திலும் கண்டிக்க முடியாத மாகாண உரிமைகளைக் கொண்ட தமிழர் தாயகம் என்ற நிலைப்பாடு செயலில் காட்டப்பட வேண்டும் இது முதலாவது பிரச்சினை.

இரண்டாவது, வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு தனி நிர்வாக அமைப்பு வேண்டும் என்று தமிழரின் அரசியல், இராணுவப் பிரிவு

(6 ஆம் பக்கம் பார்க்க)

அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சர்வபலம் கொண்டது நல்லூர்ப் படை: எம்மால் சமராடி முடியாது, சதியே துணை!!"

நல்லூர் கோட்டையிலிருந்து சேனைவீரர்கள் சாரிசாரியாக குதிரைகளில் சென்றுகொண்டிருக்கின்றனர்.

குதிரைகளின் குளம்பொலி கேட்டு சடுதியாக எழுந்து சாளரத்தினூடாக எட்டிப்பார்த்த அப்பாவுமுதலி மந்திரியை நோக்கி 'படையாளிகள் எங்கே செல்கிறார்கள்?'' என்று வினவியவாறு மீண்டும் அமர்ந்துகொள்கிறான்.

மந்திரி; (வெறுப்புடன்) அவர்கள் கடலுக்குச் செல்கிறார்கள்.

அப்பாவு; கடலுக்கா,?

மந்திரி; நீங்கள் அறியவில்லையா? வாரம் ஏழு தினங்களும் போர்ப் பயிற்சி...அதில் மூன்று தினங்கள் கடலில் பயிற்சி!

அப்பாவு; ஓ... கடற்படைப் பயிற்சியா?

மந்திரி; ஆமாம்...முத்துக்களின் பண்டமாற்று வணிகத்தால் கிடைக்கும் தயம் அனைத்தையும் படைகளுக்கு புளியாய் கரைக்கிறான் சங்கிலியன்... ஒரே போர்ப் பயிற்சியும் படைதிரட்டலும்தான்... ஒய்வேயில்லை. எதிர்வரும் தீபாவளி காலத்திற்கூட படையாளிகளுக்கு ஒய்வில்லை!

அப்பாவு; பாவம்... அவர்களும் தம் கிராமங்களுக்குச் சென்று குடும்பம் குட்டிகளை...

மந்திரி; அதில் படையாளிகளுக்கும் அக்கறையில்லாதபோது நாமென்ன செய்யமுடியும்? தை பொங்கலுக்கு ஐந்து தினங்கள் ஒய்வு கொடுப்பானும்...அதுவரை போர் ஆயத்தங்களும், போர் ஒத்திகைகளும்தான்...

எதிர்பார்ப்பு தொடர்கிறது

அப்பாவு; தோற்றுப்போன பறங்கியர் திடீரெனத் தோன்றலாமென்பது மன்னனின் எதிர்பார்ப்பு!

மந்திரி; அது இன்று நேற்றல்ல போர்முடிந்த மறுநாளிலிருந்து இந்த எதிர்பார்ப்பு தொடர்கிறது...

அப்பாவு; மன்னனின் வெற்றிவிழா உரையிலும் இது சுட்டிக்காட்டப்பட்டதாக ஞாபகம்...

மந்திரி; ஆமாம்...கறுமீன் வருமளவும் வாடி யிருக்குமாம் கொக்கு என்பதுபோல் தறைகளில் பறவைகள் காவலிருந்து தூரக்கடலைக் கண்காணிக்கின்றன...

அப்பாவு; (சிரித்துக்கொண்டே) பறங்கியரை வரவேற்பதற்காகவா?

மந்திரி; நாமும்தான் அவர்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அப்பாவு; ஆனால் நோக்கம்தான் வேறு!

மந்திரி; ஆம் .எதிரும் புதிருமானது... ஆயினும் செயலினங்கள் சங்கிலியனுக்குத்தான். எமக்குச் சிரமங்கள் மட்டும்.

அப்பாவு; தங்களின் ஏழு கிராமங்கள் மீதும் மன்னன் படைவகுத்தனுண்டா?

மந்திரி; இல்லை... மாமுல் வரிகளை தென்டக்காரர் மூலம் என் மகன் வசூலிக்கின்றான். அவைகளை அவனிடமே விட்டுவிட்டேன்...

அப்பாவு; கிராமங்களின் அதிகாரம்?

மந்திரி; சமீபகாலமாக அதையும் மகனிடமே விட்டுவிட்டேன். ஏனெனில் இராச்சிய பரிபாலனத்தில் நான் அதிக அக்கறை காட்ட வேண்டுமல்லவா?

(இருவரும் சிரிக்கின்றனர்)

மந்திரி; உங்களுக்கோர் முக்கிய விஷயம் தெரியுமா?

அப்பாவு; என்ன மந்திரி யாரே?

மந்திரி; அன்று என் மகனை வரும்படி அழைத்த சங்கிலியன் எமது சந்தத்திற்கு ஓர் நாம காரணம் செய்வதாகச் சொல்லி பரராஜசிங்க முதலி, வரராஜசிங்க முதலி என்று எழுதி வைத்துக்கொண்டானும் சங்கிலியன் சந்ததிக்கு அரச பெயரி! எனது சந்ததிக்கு முதலிப் பட்டம்... எப்படி?

முதலியா? மன்னனா?

அப்பாவு; மந்திரியாரே! அரசனின் பரம்பரைக்குத்தானே அரச பெயரி? நீங்களும் மன்னனும் ஒரே தந்தையின் புத்திரரென்பதாலேயே இந்தச் சிக்கல் ஏற்பட்டது அப்படியானால் இனி நீங்கள் பரநிருபசிங்க முதலியா?

மந்திரி; இல்லை... பரநிருபசிங்க மன்னன்!

அப்பாவு; அதற்கு விதி சதி செய்து விட்டதே மந்திரியாரே!

மந்திரி; இனி சதியாலேயே என் விதியை சீர் செய்யப்போகிறேன்

அப்பாவு; இந்த முதலிப்பட்ட விவகாரம் தங்கள் தந்தைக்குத் தெரியுமா?

மந்திரி; தெரிந்தாலும் கூட அரண்மனையில் அவர் யாருடனும் பேசவதில்லையே!

அப்பாவு; தங்கள் சிற்றப்பாவுக்கு?

மந்திரி; அவருக்குத் தெரியாது. அவர் நல்லூர் தமிழ்ச் சங்கவிழா ஏற்பாட்டிற்காக திருவாவடுதுறை போயுள்ளார்...

மாமன்னன் பரராஜசேகரத்தின் தம்பி பெயர் சேகராஜசேகரம். கல்வி கேள்வியிற் சிறந்து விளங்கிய அவர் நல்லூர் தமிழ்ச் சங்கத்தைக் காத்து வளர்த்துவந்தார். பல நூல்களை எழுதி அரங்கேற்றியதுடன் 'சேகராஜசேகரம்' எனும் சோதிட நூலையும் எழுதினார். 'பரராஜசேகரம்' என்று ஓர் மருத்துவ நூலும் இயற்றப்பட்டது

தன் சிற்றப்பாவான இளவரசர் சேகராஜசேகரத்தின் பெயரையே சங்கிலி தன் அரச பெயராகச் சூடிக்கொண்டான்.

அப்பாவு; எப்போது தமிழ்ச் சங்கவிழா மந்திரியாரே?

மந்திரி; [illegible] விழா...

அப்பாவு; சென்ற போரில் வெள்ளையர் ஜெயித்திருந்தால் இந்த தமிழ் சங்கவிழா...?

மந்திரி; நான்] மன்னனாக முடிசூடி என் செங்கோல் நிழலில் நிகழ்த்தியிருக்கும்.

அப்பாவு; ஆமாம்... போர் முடிந்து இரண்டு திங்களாகியும் ஏன் வெள்ளையர் வரவில்லை? தரங்கம்பாடிக்கு தகவல் போய்விட்டதல்லவா?

மந்திரி; அது அன்றே அனுப்பப்பட்டுவிட்டது.

சென்ற யுத்தத்தில் பெருத்த தோல்வியடைந்த வெள்ளையர் இனி பலத்த ஏற்பாடுகளுடன் வருவதற்காகச் சுணங்கலாம் சில வருடங்கள் கூடக் கழியலாம். காலம் கடந்தாகிலும் வெள்ளையர் நிச்சயம் வருவார்களென்றே காக்கை வன்னியரும் சொன்னார்.

முதன்முதல் கோட்டை இராச்சியத்துக்கு வந்து சிங்கள மன்னன் தர்மபராக்கிரமபாகுவிடம் வர்த்தகசாலை அமைப்பதற்கென ஒப்பந்தம் செய்து சென்றவர்கள் பின்னர் பன்னிரண்டு வருடங்கள் கழித்துவந்து தான் வர்த்தகசாலையைக் கட்டினார்கள். சிங்கள மன்னன் அவர்களுக்கு அனுசரணையாக இருந்த நேரத்தில் அப்படிச் சுணங்கியவர்கள், இங்கு யுத்தத்தில் தோற்றுப்போய்விட்டபின், அவர்களின் மன்கோட்டையும் தரைமட்டமாக்கப்பட்டபின் அதற்கு மேலாகச் சுணங்குவார்களோ தெரியாது.

ஆனால் அதுவரை நாம் காத்திருக்க முடியுமா? காத்திருக்கக்கூடிய விடயமா?

அதனால்தான் நாம் இனி வெளிப்படையாக அவர்களுக்கு ஆதரவுதர விரும்பி உடனடியாக வரும்படி தகவல் அனுப்பினோம்.

இந்த விவரம் உங்களுக்கும் தெரியும்தானே?

அப்பாவு; வெள்ளையரின் நெருக்கடி வருகையை எதிர்பார்த்துத் தான் காக்கைவன்னியர் இன்று ஏர்பூட்டு விழாவிற்கு வரவில்லைப் போலும்...

மந்திரி; தனக்கு கசயினம் என்று சங்கிலியனுக்கு ஓலை அனுப்பியிருந்தார்...

அப்பாவு; உண்மையாகவா?

மந்திரி; அது 'சும்மா' ஓலை!

அப்பாவு; வெள்ளையர் நெடுந்தீவுக்கு வந்தால் நீங்களும்...

மந்திரி; அப்பப்பா... நான் சந்திக்கமுடியாத அது மிக ஆபத்தான விடயம்... காக்கை வன்னியர் எவ்வாறறையும் கவனிப்பார் முதலில் அவர்கள் நோக்கம் அறிந்து பின்னர் நம் திட்டங்களைச் சொல்லுவோம்...

அப்பாவு; மன்னனிடம் கடற்குதிரைகளும் துப்பாக்கி வெடிமருந்துகளும் ஏராளமாகவிருப்பதால் அவர்கள் இங்கு காலூன்ற முடியுமா?

மந்திரி; எவ்வளவும் காக்கை வன்னியரையும் பிடித்துலுப்பும் விடயம் இது ஒன்றுதான்...

அப்பாவு; ஏன் என்னை மறந்துவிட உத்தேசமா?

மந்திரி; நம் மூவரையும்தான்...

அப்பாவு; அப்படியானால்...

மந்திரி; சங்கிலியனின் படை சர்வபலம் கொண்டதாகிவிட்டது. இனியும் சமர்புரிந்து வேலையில்லை. சூழ்ச்சியினால் தான் சங்கிலியனை வீழ்த்தவேண்டும்.

இதுதான் என் மந்திரம்...

அப்பாவு; அதற்கும் வெள்ளையர் இங்கு வந்து சேரவேண்டுமே? எப்படி வருவது? கடலிலே மன்னனின் கடற்குதிரைகள் எதிர்கொள்ளுமல்லவா?

மந்திரி; சிக்கலான கேள்விதான்...

அப்பாவு; (சற்று யோசித்தபின்) சாமவேளை கடற்குதிரைகளில் துவாரம் விழுவிட்டாலென்ன? எல்லாம் நீருக்குள் படுத்துவிடும்...

மந்திரி; நல்லயோசனை தான்...ஆனால் ஆந்தைகளின் கண்கள் பார்த்துக்கொண்டேயிருக்கும். அடுத்தநொடி நம்மை ஆபத்து சூழும்!

அப்பாவு; ஆந்தைகளா வேறு?

வியாபாரம்

மந்திரி; ஆமாம்... இரவுக்காவல்!

அப்பாவு; வேறு வழி?

காலமா? அகாலமா?

மந்திரி; வருடக்கணக்கில் பொறுத்திருந்த நான் இனியும் பொறுப்பம் பொறுத்திருக்கத் தான் வேண்டும். வெள்ளையர் வந்தபோதும் காலம் பதில் சொல்லும்...

அப்பாவு; அது நமக்கு அகாலமாகி விடக்கூடாது...

மந்திரி; நிச்சயமாக இல்லை (இருவரும் சிரிக்கின்றனர்)

அப்பாவு; அப்போ நான் சென்றுவரட்டுமா யுத்தநிலை பார்த்துச் செல்லவேண்டும்...

மந்திரி; (முகத்தைக் சுழித்தவாறு)ஓ...சேனாதிபதியின் காதலி செம்பியன் வானதியையா?

அப்பாவு; அவள் வீரமாணிக்கதேவனை காதலிப்பதை சமீபத்தில்தான் அறிந்தேன்... அவன் படையாளி ஜாதியைச் சேர்ந்தவன். சம்மதிப்பேனா நான்...

மந்திரி; அந்தவிதமா என்னத்தேவையில்லை.. சங்கிலியின் கதை முடியும்போது சேனாதிபதியின் கதை தொடரவா போகிறது. இப்போது மகளிடம்...

அப்பாவு; இதுபற்றிப் பேசமாட்டேன்.. வருகிறேன்.

மகளையை இழந்த அப்பாவுமுதலி தன்ஒரே மகன் செம்பியன் வானதியை ராணி பெரிய நாச்சியாரின் நிழலில் அரண்மனையில் விட்டிருந்தான். அவள் சௌந்தரியம் நிறைந்தவள். சேனாதிபதிக்கும் செம்பியன் வானதிக்குமுள்ள காதல் ராணிக்கோ, மன்னனுக்கோ தெரியாது.

மந்திரி மாளிகையிலிருந்து அரண்மனைக்குச் சென்ற அப்பாவுமுதலி செம்பியன் வானதியைச் சந்தித்துப் பேசிய பின்னர் தன் குதிரையுந் தந்தரோடைக்கு விரைகிறான்.

பண்ணைக் கடலில் நல்லூர் சேனையின் கடற்போர்ப் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களின் போர்ப் பயிற்சியை கரையோரம் நின்ற குடிமக்கள் பார்த்து பிரமித்து நிற்கின்றனர்.

அக்காலத்தில் பண்ணைக்கடலின் ஆழமோ பாதை இல்லை. எந்தத் தீவும் பாதைகளினால் இணைக்கப்படாதிருக்கவில்லை.

மூன்று பெருந்தோணிகளில் பறங்கியரின் பொம்மைகளை நாட்டி

(6-ஆம் பக்கம் பார்க்க)

மா.ந.அ.அந்தனிசில்

சிற்றரசன் அப்பாவு முதலியிடம் மதி மந்திரி சொன்ன மூடுமந்திரம்!

பறங்கியர் கோட்டை மீது படை கொண்டு மோதிய நல்லூர்அரசு (அத்தியாயம் பதினேழு ஆ)

பரிசு பெற விரும்பிய காவலாளியும் திருனலிராமன் செய்த தந்திரமும்

விஜயநகரத்தை ஆண்ட கிருஷ்ணதேவராயரின் தர்பாரில் தெனாலிராமன் என்னும் விடலை ஒருவன் இருந்தான் கிருஷ்ண தேவராயரின் காவலாளியாக திம்மையன் என்னும் காவல்காரன் இருந்தான். அவன் தினமும் கவிஞர்களும் இசைவாணர்களும் நடன மாதர்களும் வந்து ராயரிடம் பரிசு பெற்றுப் போவதைப் பார்த்துத் தானும் அரசரிடம் பரிசுபெற்று வெகுமதி அடைய வேண்டுமென்று விரும்பினான்.

இதற்கு என்ன வழி என்று அவன் தெனாலிராமனிடம் போய் 'ஐயா! நானும் மற்ற கவிஞர்கள் போல அரசனிடம் பரிசுபெற ஏதாவது வழி செய்யுங்கள்' எனக் கேட்டான்.

தெனாலிராமனும் "ஓ! செய்கிறேன் ஆனால் உனக்குக் கிடைப்பதில் பாதியை எனக்குக் கொடுக்கிறாயா?'' எனக் கேட்டான். காவல்காரனும் தருவதாகக் கூறவே தெனாலிராமனும் ஒரு கவிதையை எழுதிக் கொடுத்து அரசர் ஏதாவது கேள்வி கேட்டால் அதற்கு எப்படிப் பதில் சொல்ல வேண்டும் எனவும் சொல்லி அனுப்பினான்.

மறுநாள் திம்மையனும் தர்பாரில் போய் தெனாலிராமன் எழுதிக் கொடுத்த கவிதையைக் கூறினான். சபையோர் ''ஆகா! அற்புதமான கவிதை!''எனப் பாராட்டினார்கள். கிருஷ்ணதேவராயரும் "திம்மையா! இப்படி உயர்ந்த கவிதையை நீ எப்படி எழுதினாய்?'' என்று கேட்டார் அவனும் முன்பே தெனாலிராமன் கூறிக் கொடுத்தபடி" பூவோடு சேர்ந்த நாரும் மணப்பதுபோல தங்கள் தர்பாரில் இருக்கும் நான் மாத்திரமல்ல ஒவ்வொரு வாசற் கதவு கூடக் கவிதை பாடும்'' என்றார்.

அதுகேட்டு அங்கிருந்தோர் யாவரும் கைதட்டி 'பேஷ் பேஷ்'' என்றனர் அப்பொழுது ராயர் "உனக்கு என்ன பரிசு வேண்டும்''?எனக் கேட்டார். திம்மையனும் சற்றுமுன் நடனமாடிய பெண்களுக்கு ராயர் சரிகைச் சால்வை கனை அளித்ததைப் பார்த்தான் அவனுக்கு அப்போது சட்டென ஒரு யோசனை தோன்றியது அதன்படி நடந்தால் போதும் தான் அவ்விதச் சால்வை ஒன்றைப் பெற்றால் தெனாலிராமனுக்குப் பங்கு கொடுக்க வேண்டியது இல்லை என்றும் அது எப்போதும் தன்னிடமே இருக்கும் என்றும் எண்ணி, அவன் தனக்குச் சால்வை பேர்த்தி கொடுக்கவேண்டாம் போதும் எனக் கூறினான் ராயரும் அவ்வாறே சால்வையைப் பேர்த்தினார்.

சபையில் இருந்த தெனாலிராமன் இதைக் கண்டு திம்மையனுக்கு நல்ல பாடம் கற்பிக்கத் தீர்மானித்துக் கொண்டான். இதற்கு ராயர் அங்கு அமர்ந்திருந்த மற்றக் கவிஞர்களிடம் 'நம் திம்மையன் திறமையை ஒரு கவிதையால் பாராட்டுங்கள்'' என்றார்.

உடனே ஒரு கவிஞர் ''வாசல் காக்கும் திம்மையா'' என்றார் இரண்டாவது கவிஞர் ''வந்து நின்றாய் இங்கு நீ'' என்ற அடியைச் சேர்த்தார். மூன்றாவது கவிஞரும் ''வாங்கினாய் பரிசை மன்னரிடம்'' எனவே நான்காவதாக அமர்ந்திருந்த தெனாலிராமன் 'வாக்குப்படி எனக்குக் கொடுத்திடய்யா!'' என முடித்தான்

அதைக் கேட்ட ராயர் ''வாக்கு என்ன? உனக்கு ஏன் கொடுக்க வேண்டும்!'' என்ற தெனாலிராமனிடம் கேட்டார். அவனும் புன்சிரிப்புடன் எழுந்து ஏதோ சொல்ல முயன்றான். உடனேயே திம்மையன் தன் குட்டு வெளியாகிவிடப் போகிறதே எனப்பயந்து அரசனிடம் ''அரசே இதை நான் தெனாலிராமனுக்குக் கொடுக்க அனுமதியுங்கள்'' எனக் கூறி அவரது பதிலுக்குக்கூடக் காத்திராமல் சால்வையை எடுத்து ராமன் மீது போர்த்தினான் பிறகு ஒரு நிமிடம் கூடத் தாமதியாமல் அங்கிருந்த அவன் வேகமாகப் போய்விட்டான்.

ராயருக்கு விஷயம் புரிந்து விட்டது திம்மையன் தான் வாக்கும் பரிசில் தெனாலிராமனுக்குப் பங்கு கொடுப்பதாக வாக்களித்திருக்க வேண்டும் என்று தெரிந்து கொண்டார். அந்த வாக்கைக் காக்காமல் திம்மையன் தெனாலிராமனை ஏமாற்றவே சால்வையைப் பரிசாகக் கேட்டானென்றும் அந்தக்குட்டை தெனாலிராமன் சபையில் உடைத்தானென்றும் அவருக்குத் தெரிந்து விட்டது அவரும் தெனாலிராமனைப் பார்த்துப் புன்னகை புரிந்தார் ★

தசரதனின் மனவருத்தம்

தசரதச் சக்கரவர்த்தி ஸ்ரீராமனைக் காட்டுக்கு வனவாசம் செய்யும்படி அனுப்பும் பொழுது, தாங்கமுடியாத மனவேதனைப்பட்டான் அப்பொழுது பழமையை எண்ணினான்.

முதுமைத்தில் தான் தெரியாததனமாக ஒரு சிறுவனை, யானை என்றெண்ணி அம்பினால் கொன்றதும், குருடர்களாகிய அச்சிறுவனின் பெற்றோர்கள் தனக்கு இட்ட சாபத்தையும் நினைத்தான்.

'நீயும் புத்திரசோகத்தால் மனம் நொந்து மடிவாய்' என அப்பெற்றோர் சொன்னது எவ்வளவு உண்மை என்பதை அறிந்து மனம் வருந்தினான்!

★

உலகில் சிறந்த உத்தியோகம் இது!

உலகில் சிறந்த-உயர்ந்த - தொழில்எது தெரியுமா?

லண்டன் பொலீஸ் தானாம்!

ஏனெனில் அப்பதவி வகிப்பவருக்கு தெரியாது என எதுவுமே தெரியாதாம்.

அப்பதவி வகிப்பவரிடம் யார் என்ன கேள்வி கேட்டாலும் சரியான பதிலைத் தர அவரால் முடியும்.

வெ கேள்விகளுக்குத் தக்க விடையோ அதன் காரணமோ புரியாது விடினும் கூட கேள்வி கேட்பவர்களைச் சிறிது தாமதிக்கச் சொல்லி உரிய இடத்திற்கு உடனடியாகத் தொடர்பு கொண்டு சரியான பதிலைப் பெற்றுத் தருவாரும்.

இதனால் ஏற்பட்ட சிறிது தாமதத்திற்குக் கூட மன்னிப்புக்கோர லண்டன் பொலீஸ் மறப்பதில்லை.

அத்துடன் லண்டன் பொலீஸாரிடம் உண்மை [illegible] ஒழுக்கம், [illegible] பண்பு, கடமை,புலமைச்சி எல்லாம் சரிவர நிறைந்திருக்கும்.

★

குடியால் மடியாது . . .

குடி குடி என்று குடித்துக் குட்டிச் சுவராகப் போவோருக்கு ஒரு பச்சைக் கொடி! குடிப் பழக்கத்தை விட முடியவில்லை பழகியதை எப்படி விடுவது?

குடிப்பழக்கத்தை விட முடியாமலிருப்பதற்கு மூளையிலுள்ள குறிப்பிட்ட பகுதிதான் காரணம் என்பதை விஞ்ஞானிகள் இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள்

குடிகாரனின் மூளையில் சிறிய சத்திர சிகிச்சை செய்து குடிப்பழக்கத்துக்குக் காரணமான ஒரு பகுதியைச் செயலிழக்கச் செய்கிறார்கள். ஐம்பதாண்டு மிக்க மீட்டர் அளவே உள்ள இந்தப் பகுதி செயலிழப்பதால் மூளையின் மற்ற இயக்கங்கள் சிறிதும் பாதிக்கப் படுவதில்லை.

★

பஞ்சாமிர்தம் பலாசுவை அமிர்தம்

மணிக்கூட்டில் தலைவருக்கு அஞ்சலி!

கடிகார விளம்பரங்களில் சிறிய முள் 10 என்ற எண்ணிலும், பெரிய முள் 10 நிமிடங்களைக் காட்டுவது போன்றும் அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

இந்த 10-10 க்கு அப்படி என்ன விசேஷம் இருக்கிறது!

இது சரித்திரப் பிரசித்தி பெற்ற ஒரு நிகழ்ச்சியை உலக மக்களுக்கு நினைவு படுத்துகிறது.

அந்த நிகழ்ச்சி ஆபிரகாம்லிங்கன் சுடப்பட்ட நேரம். அந்த நேரத்தை உலக மக்களுக்கு நினைவு படுத்தக் கடிகாரம் தயாரிப்பவர்கள் 10 – 10 ஐக் காட்டி விளம்பரத்தின் மூலம் அடிமை விலங்கொடித்த ஆபிரகாம் லிங்கனை நன்றியோடு நினைவூட்டி வருகிறார்கள்.

வேறு எந்த உலகத் தலைவருக்கும் செய்யப் படாத சிறப்பு அஞ்சலி இது!

★

300 ருத்தலுடன் 3,000மைல்கள்

ஒரு எறும்புபோல் கறு கறுப்பாக இருக்க வேண்டும் என்று கூறுவதுண்டு

எறும்பினுடைய அளவுடன் மனிதனது உருவத்தை ஒப்பிடும்போது அதன் விகிதாசாரப்படி அவன் செய்ய வேண்டிய வேலையின் அளவு ஒரு நாளில் 300 ருத்தல் எடையைச் சுமந்து கொண்டு 3000 மைல் நடக்க வேண்டும்.

அது மட்டுமா? நியூயோர்க்கிலுள்ள 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்' கைப் போல் 12 மடங்கு உயரமுள்ள ஒரு கட்டடத்தைக் கட்டி முடிக்க வேண்டும்.

★

சமுதாய நோய்கள்

அரை நூற்றாண்டுக்கு முன்னர் காந்திஜி நம் சமுதாயத்தைப் பீடித்துள்ள ஏழு நோய்கள் இருக்கின்றன என்று கூறினார்.

அவை என்ன என்று தெரியுமா?

கொள்கை இல்லாத அரசியல், உழியமற்ற வணிகம், மனச்சாட்சி யற்ற இன்பம், குணமில்லாத அறிவு, ஒழுக்கமற்ற வர்த்தகம், மனிதாபிமானமில்லாத விஞ்ஞானம், நியாயமில்லாத வழிபாடு.

★

கல்லறைகளில் வாழும் 10 லட்சம் பேர்

உயிருடன் வதிப்பவர்கள் 'கல்லறை'களுக்கும் சென்றும் கணக்கெடுத்தார்கள் எகிப்து குடிசன கணக்கெடுப்பதிகாரிகள்.

1882ஆம் ஆண்டுக்குப் பின் எகிப்தில் ஆண்மையில் குடிசன மதிப்பீடு நடத்தப்பட்டது.

அப்போதே அரசு அதிகாரிகள் 'கல்லறை'களுக்கும் சென்றும் கணக்கெடுப்புநடத்தினர் பணக்கார முஸ்லிம்களில் கல்லறைகளைச் சுற்றி குடியிருப்புப் பகுதிகள் அமைக்கப்பட்டதே இதற்குக் காரணம்.

இப்படி 'கல்லறை'ப் பிரதேசங்களில் மட்டும் சுமார் 10 லட்சம் பேர் வாழ்கின்றனர்.

இதுவல்லவோ ஞாயிறு மலர்!

3-12-61ல் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை 678 பக்கங்களில் ஞாயிறு மலரொன்றை வெளியிட்டது. அதன் எடை 6 பவுண்ட்.

சுமார் 15 லட்சம் பிரதிகள் அச்சாவதற்குத் தேவையான காகிதம் 4500டன். இந்தப் பேப்பருக்குத் தேவைப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 77 ஆயிரம்.

இவை வெட்டப்பட்டதால் தரிசான நிலத்தின் பரப்பு 360 ஏக்கர்.

★

ஔவை சொல்நீதி கேளு

அறிவினாற் தேடு - எந்நாளும்
ஆனவப் பேசை மூடு
இனியவை கூறு - நேர்மை
ஈகையில் நிறைவு கொள்ளு.

உண்மைகள் பேசு - கொடுமை
ஊறுகள் உனக்குத் தாக
எந்நாளுமே இறையை - நோக்கு
ஏழ்மையை உழைப்பால் தாக்கு

ஐயங்கள் நீக்கு - அன்பு
ஒற்றுமை மனதில் தேக்கு
ஓரினம் மக்கள் கிழவி
ஔவை சொல்நீதி கேளு

-- நெடுந்தீவு ஸ்க்ஸ்மன்

அறிந்து கொள்வீர்

வினா

1. புவிக்கு அண்மையில் உள்ள நட்சத்திரம் எது?
2. முதன் முதல் உலகப் படத்தை வரைந்தவர் யார்?
3. உலகில் மிகப்பெரிய நாணயங்களை வெளியிடும் நாடு எது?
4. இரண்டாம் உலகப் போரை நடத்திய ஜெர்மன் சர்வாதிகாரி யார்?
5. உலகின் முகடு எனப்படும் மேட்டு நிலம் யாது?
6. சமுத்திரத்தில் ஆழமும் ஆழமான இடம் யாது?

விடை

1. ஆல்வா டிரெக்மோ
2. தொலமி
3. யாப் தீவுகள்
4. அடொல்ஃ ஹிட்லர்
5. திபெத்து மேட்டு நிலம்
6. மரியானா ஆழி

பொ. சுந்தரமூர்த்தி
[illegible]
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுகைக்காகக் கவிஞன் ஏங்குவானா?

எது கைக்கு வருகிறதோ அதனை ஏற்பானா?

"மரபுக்கவிதை எழுதுவதைவிட, புதுக்கவிதை எழுதுவது கடினமானது. ஏனென்றால் மரபுக்கவிதைக்கு ஒரு வடிவம்- ஒழுங்கு உண்டு. ஆனால் புதுக்கவிதை தனது அற்புதமான கற்பனையாலோ ஆழமான கருத்தோட்டத்தாலோ உள்ளார்ந்த உணர்ச்சியினாலோ மட்டுமே தன்னைக் கவிதை என்று காட்டிக் கொள்ள முடியும்''. கவிஞர் மு. மேத்தா சஞ்சீவி (10 01 1987,தொகுப்பு: கணேஷ்)

'பாரதிதாசன் விருது' பெற்ற கவிஞர் மு. மேத்தாவின் மேற்கண்ட கருத்து தமிழ்க்கவிதை யுலகிலே - ஆய்வறிஞர்கள் மட்டத்தில் காளாதி காலமாகக் கேள்விப்பட்ட கருத்தாயினும் இன்று இக்கற்றறிந்த அவதானத்தைப் பெற வேண்டியதொன்றாயுள்ளது.

இப்படிக் கூறுவதனால் இக்கட்டுரையாளர் புதுக்கவிதையாளரையும், புதுக்கவிதைகளையும் எதிர்ப்பவரென்ற தவறான கருத்துக்கு வாசகர்கள் சென்றுவிடக் கூடாது. ஆவ்வாறு கருதினால் தமிழ் மொழி இறந்துவிட்டதென்ற கூற்றின் ஒப்புக்கொள்ளுவர்களாகிவிடுவோம். ஒப்பாசாரத்திற்காக வல்லாது உண்மையிலேயே கறுவதானால் 'தமிழ்க்கவிதையோட்டத்தில் ஒரு புதிய வீச்சினை உண்டுபண்ணியுள்ள நெறி புதுக்கவிதை நெறி, எனலாம். எனினும் அது தோற்றம் பெற்றமைக்கான தேவை பூர்த்தியடைந்ததும் அத்தகு கவிதைப்போக்கின் ஓட்டமும் வீச்சும்தானே ஓடுங்கும்.

இதுவே தமிழ்க்கவிதை வரலாற்றோட்டத்தினிலிருந்து நாம் பெறும் முடிவாகிறது

பாரதிக்கு முன்னும் பின்னும்

இருபதாம் நூற்றாண்டிலே தமிழ்க்கவிதைத் துறை செழித்து வளர்வதற்கு அதற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த 'கீர்த்தனைக் கவிஞர்கள்' பேருதவி புரிந்தனர்.

அருணாசலக்கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதியார், இராமலிங்கசுவாமிகள், வேதநாயகம் பிள்ளை, முத்துத்தாண்டவர், திரிகூடராசப்ப கவிராயர் முதலியோர் இசைக் கீர்த்தனைகளினூடு மொழி எளிமை, உணர்ச்சி ஆதியன ஊட்டினர்

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரே இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மறுமலர்ச்சியூட்டிய புதுநெறி புகட்டிய பாவலனாகத் தோற்றம் பெறுகிறார். பேச்சோசைப் பண்புகொண்ட பாரதியின் கவிதைகள் சமுதாயத்தைத் தட்டியெழுப்பிய கவிதைகளாக அமைந்தன.

பாரதி தேசப்பற்று, மொழிப்பற்று, சீர்திருத்த ஆவேசம், பெண்மையின் நலிவு, பாரத ஐக்கியம் ஆதியன வற்றைப்பற்றிப் பாடிய தடன் தொழிலே கவிதைகளாகக் கொண்டு வாழ்ந்தவன் புதிய உவமைகள், கற்பனை வெளிப்பாடு, வீறார்ந்த சொல்வாட்சி, மெட்டுக்களாலான பாவடிவம் என்பனவற்றினூடு எவி சமைத்தவன் பாரதி.

புத்தியிரையும் புதுமெருகையும் தமிழ்க் கவிதைத்துறைக்கு ஏற்படுத்தி 'எங்கும் தமிழ்' என்ற உணர்வுக்குச் சமுதாய உணர்ச்சியை நெறிப்படுத்தினான். கவுணர்ச்சி 'விடுதலை' என்ற எழுச்சி நாதத்தை எதிரொலித்து விழிப்பையும் வேகத்தினையும் உண்டுபண்ணவாயிற்று. விறுகொண்ட ஒரு கவிதைப் பரம்பரையினையே தோற்றுவித்தவன் பாரதி

பாரதி காலவெள்ளத்தையும் கடந்து நிற்கும் மகாகவி பட்டை தீட்டப்பட்ட நல்வைரம்.

தமிழிலக்கிய வரலாற்றிலே யார் கவிஞன்? எது கவிதை?

பாரதி தேசப்பற்று, சீர்திருத்த ஆவேசம், பெண்மையின் நலிவு, பாரத ஐக்கியம் ஆதியன வற்றைப்பற்றிப் பாடிய தடன் தொழிலே கவிதைகளாகக் கொண்டு வாழ்ந்தவன் புதிய உவமைகள், கற்பனை வெளிப்பாடு, வீறார்ந்த சொல்வாட்சி, மெட்டுக்களும், இன்று நடந்து கொண்டிருக்கின்றன.

சத்திபத்தின் எழிலுருவம் சொற்கள் ஒவ்வொன்றிலும் தாண்டவமாடுகிறது. தெய்வீக சக்தியைத் தன் கவிதைகள் ஒவ்வொன்றிலும் அவன் பாய்ச்சியிருக்கின்றான்.

ஆகவே தான் அவன் கவிதைகளில் உயிர்த் சக்தி நிரம்பி வழிகிறது

ஆத்மீக பலம் மிக்க பாரதி

பாரதி தெய்வத்தை முற்றாக நம்பினான் தெய்வீக சக்தியை நம்பினான் தெய்வீக அருளின்றி மண்ணில்லை விண்ணில்லை; மண்ணுக்கு மணமில்லை, ஒளியில்லை, மலர்தரு சோலையில்லை; விண்ணுக்கு மதியில்லை, மின்னும் நட்சத்திரங்களில்லை, காற்றில்லை; காக்கைக்குக் கருமைநிறமில்லை; கரிய குயிலுக்குத் தேவினுமிய குரலில்லை; ஆத்மாவுக்கு அழகான தோலையில்லை

ஈழத்துக் கவிதைத் தடம் பாரதி காலத்திலேயே அவனது உணர்வு நலன்களைக் கொண்டு அமையலாயிற்று. பாவலர் துரையப்பாபிள்ளை பாரதியின் சிந்தனைப் போக்கினராக விளங்கினார். பாவலர், பாரதிக்கு முன் தோன்றியவர். இருவருமே ஒரே இலட்சியத்திற்காக உழைத்துத் தற்றமது தாய்நாடுகள் உயர்நிலை அடையவேண்டுமென அயராது பாடுபட்டவர்கள். இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து இலக்கிய சகாப்த முதல்வர் பாவலர் துரையப்பா பிள்ளையே எனலாம்.

பாரதிக்குப் பின்

தமிழில் பாரதிக்குப் பின் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் என்போர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது பாடக் கவிலே சாந்த உணர்ச்சி ததும்பி நிற்கும். கொழியின் நெவிவு கவிவுகளையும், இவிய சொற்களால் உள்ளத்தை நேரடியாகத்தொடுகின்ற இயல்பும் மிகச் சாதாரணமாக யாரும் உணர்ந்து அனுபவிக்கமுடியும். நாமக்கல் கவிஞரைக் 'காந்தியுகக்கவிஞர்' என்பர். பொருளை நேரடியாகக் காட்டும் சொற்களால் இவர் யாத்த கவிதைகள் பலரை இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடச் செய்தன 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்த மொன்று வருகுது' என்ற பாடல் நாமக்கல் கவிஞரியற்றியதே

சமுதாயக் கொடுமைகளைக் கண்டு சீறி வேகத்துடனும், விறுவிறுப்புடனும் முழங்கியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். சாதிவேறுபாடுகள், தீண்டாமை, மதம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், பெண்களுக்குச் சமூகம் செய்யும் கொடுமைகள் என்பன பாரதிதாசனது கவிப்பொருள்கள். 'தமிழ் மயக்கம்' நன்கேறிய வர் பாரதிதாசன்.

இவர்களின் பின் தமிழ்க்கவிதைக்கு வளம் சேர்த்தவர்களில் ச. து. சு. யோகியார், கவிஞர் தமிழ்ஒளி, வாணிதாசன், முடியரசன், கண்ணதாசன், கவிஞர் சுரதா வுடன் இன்னுஞ் சிலரைக் குறிப்பிடலாம்.

கண்ணதாசனது பாடல்களில் இனிய சொற்களையும், அவை எளிதிலே கருத்தை யுணர்த்தும் பாங்கினையும் காணலாம். திரைப்படப்பாடல்கள் மூலம் சாதாரண மக்களையும் கவிதையின்பத்திலாழ்த்தியவர் இவர்.

வாணிதாசன், முடியரசன் கவிதைகளில் சமுதாய சீர்திருத்தமே மேலோங்கி நிற்கிறது.

புதுக்கவிதை மரபு (Free Verse, Prose Poem) என்று ஆங்கிலத்திலே வழங்கப்படுவதாகலாம். 'வால்ட்விட்மன்' பிதாமகர் பாரதி தாமே சில வசன கவிதைகளைப் படைத்துள்ளான். 'ஒரு கட்டுப்பாட்டிற்கு உடன்பட்டுக் கவிதை செய்வதைக் காட்டிலும் அந்தக் கட்டு

-கனகசபாபதி நாகேஸ்வரன்-

மலர்தரு சோலையில்லை; விண்ணுக்கு மதியில்லை, மின்னும் நட்சத்திரங்களில்லை, காற்றில்லை; காக்கைக்குக் கருமைநிறமில்லை; கரிய குயிலுக்குத் தேவினுமிய குரலில்லை; ஆத்மாவுக்கு அழகான தோலையில்லை

ஈழத்துக் கவிதைத் தடம் பாரதி காலத்திலேயே அவனது உணர்வு நலன்களைக் கொண்டு அமையலாயிற்று. பாவலர் துரையப்பாபிள்ளை பாரதியின் சிந்தனைப் போக்கினராக விளங்கினார். பாவலர், பாரதிக்கு முன் தோன்றியவர். இருவருமே ஒரே இலட்சியத்திற்காக உழைத்துத் தற்றமது தாய்நாடுகள் உயர்நிலை அடையவேண்டுமென அயராது பாடுபட்டவர்கள். இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து இலக்கிய சகாப்த முதல்வர் பாவலர் துரையப்பா பிள்ளையே எனலாம்.

பாரதிக்குப் பின்

தமிழில் பாரதிக்குப் பின் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் என்போர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது பாடக் கவிலே சாந்த உணர்ச்சி ததும்பி நிற்கும். கொழியின் நெவிவு கவிவுகளையும், இவிய சொற்களால் உள்ளத்தை நேரடியாகத்தொடுகின்ற இயல்பும் மிகச் சாதாரணமாக யாரும் உணர்ந்து அனுபவிக்கமுடியும். நாமக்கல் கவிஞரைக் 'காந்தியுகக்கவிஞர்' என்பர். பொருளை நேரடியாகக் காட்டும் சொற்களால் இவர் யாத்த கவிதைகள் பலரை இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடச் செய்தன 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்த மொன்று வருகுது' என்ற பாடல் நாமக்கல் கவிஞரியற்றியதே

சமுதாயக் கொடுமைகளைக் கண்டு சீறி வேகத்துடனும், விறுவிறுப்புடனும் முழங்கியவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். சாதிவேறுபாடுகள், தீண்டாமை, மதம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், பெண்களுக்குச் சமூகம் செய்யும் கொடுமைகள் என்பன பாரதிதாசனது கவிப்பொருள்கள். 'தமிழ் மயக்கம்' நன்கேறிய வர் பாரதிதாசன்.

இவர்களின் பின் தமிழ்க்கவிதைக்கு வளம் சேர்த்தவர்களில் ச. து. சு. யோகியார், கவிஞர் தமிழ்ஒளி, வாணிதாசன், முடியரசன், கண்ணதாசன், கவிஞர் சுரதா வுடன் இன்னுஞ் சிலரைக் குறிப்பிடலாம்.

கண்ணதாசனது பாடல்களில் இனிய சொற்களையும், அவை எளிதிலே கருத்தை யுணர்த்தும் பாங்கினையும் காணலாம். திரைப்படப்பாடல்கள் மூலம் சாதாரண மக்களையும் கவிதையின்பத்திலாழ்த்தியவர் இவர்.

வாணிதாசன், முடியரசன் கவிதைகளில் சமுதாய சீர்திருத்தமே மேலோங்கி நிற்கிறது.

புதுக்கவிதை மரபு (Free Verse, Prose Poem) என்று ஆங்கிலத்திலே வழங்கப்படுவதாகலாம். 'வால்ட்விட்மன்' பிதாமகர் பாரதி தாமே சில வசன கவிதைகளைப் படைத்துள்ளான். 'ஒரு கட்டுப்பாட்டிற்கு உடன்பட்டுக் கவிதை செய்வதைக் காட்டிலும் அந்தக் கட்டு

எழுதுவதெல்லாம் புதுக் கவிதைகளாகா; அவ்வாறாயின் அவை எப்படித் தமிழ்க்கவிதைகளாகலாம்?

ஈழத்திலே பத்திரிகைத் துறை வளர்ச்சியுடன் கவிதைத்துறை வளர்ச்சி இணைகின்ற காலகட்டமாக 1943, 44 ஆம் ஆண்டுகள் அமைகின்றன. 'மறுமலர்ச்சிச்சங்கம்' உதயமாகியது. வரதர், அ செ. மு. நாவற்குழியூர் நடராசன், அ ந கந்தசாமி, ஈழச் சாட்சரசர்மா என்போர் சங்கத்தின் ஆலைக்கு, மகாகவி து உருத்திரமூர்த்தி, செ. கதிரேசர் பிள்ளை, 'சாரதா', அ.ந. கந்தசாமி, சோ. இளங்கோ, நாவற்குழியூர் நடராசன் ஆகியோர் கவிதை எழுதினர்.

ஈழகேசரி, பாரதி, இராமலிங்கம் ஆகிய பத்திரிகைகளிலும் கவிதைகள் வெளியாயின.

1951-60 காலகட்டத்தில் இ. முருகையன், பரமஹம்சர், திமிலைத் துமிலன், நீலாவணன், தா ராஜேந்திரக்கவிராயர், நயினை ஆ இராமுப்பிள்ளை, வன்னியூர்க் கவிராயர் என்போரது கவிதைகளும், தொடர்ந்து மு. பொன்னம்பலம், செ. து. தெட்சணாமூர்த்தி, சி மௌனகுரு, செ. மகேந்திரன், ஆட்லிறை (மயில்கூடலூர் பி. நடராசன்) இறையொளி, பார்வதிநாதசிவம், காசி ஆனந்தன், வி. கந்தவனம் போன்றோரும் கவிதை எழுதினர்.

1970-27கால கட்டத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கடல் கடந்த கடிதம்

கல்விச் செலவைக் கட்டுப்படுத்து!

தம்பி,

பொருளாதார நெருக்கடி அதிகரித்து விட்டது. வாழ்க்கை சீராக வேண்டுமென்றால், தம்பி, எங்கும் எதிலும் சிக்கனம் அவசியம்!

கல்வி மிக மிக அவசியம். கல்விச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. எங்கெங்கெல்லாம் செலவைக் குறைக்கலாம் எனப் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய முத்திறத்தாரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும்!

இலவசப் பாடநூல்கள் வந்த பின்பும், தனியார் பயிற்சிநூல்கள், பாடநூல்கள் என்பன அளவுக்கதிகமாகத் திணிக்கப்படலாமா?

ஆரம்பக் கல்வித் திட்டத்தில் செயல் மூலம் உணர்தல் முக்கிய இடம் பெறுகின்றது! ஆக்க முயற்சிகள் ஊக்குவிக்கப்படுகின்றன; வரவேற்க வேண்டிய திட்டம்! சூழலிலே சிக்கனமாகக் கிடைக்கும் பொருள்களையே சிறார்கள் பயன்படுத்த வேண்டும் ஆனால், சில இடங்களில் காண்பதென்ன? விலையுயர்ந்த பிறநாட்டு மூலப் பொருள்கள்- கலர்ப்பெட்டிகள்- அலங்கார ஆடம்பரக் கொப்பிகள்! தம்பி, ஆரம்பக் கல்வியின் நோக்கமே திசை திரும்புகிறதே!

சீருடைகள் - எழுதுகருவிகள் - போக்குவரத்துச் செலவு-பாடசாலை விழாக்களின் செலவு! இத்தனையும் போதாதென்று டியூசன் செலவு! பாவம் பெற்றோர்கள்! குழந்தைகளின் எதிர்கால நன்மைக்காக, வயிற்றைக்கட்டி, வாயைக்கட்டி, கல்விச்செலவைப் பொறுத்துக் கொள்கிறார்கள்!

இத்தனைக்கும் பிறகு — பரீட்சை முடிவுகள் வந்ததும் – தலையில் கையை வைத்து என்ன பயன்?

அன்புடன்

— சிவா —

'மனுஷனைச் சாகடிக்கவும் லொத்தர் போடுவாங்களா?'

-கண்டி உயர்நீதி மன்றத்தில் ஜூரர்கள் சத்தியப்பிரமாணம் எடுத்தபின் வழக்கு விசாரணை ஆரம்பமாகியது

குற்றவாளிக் கூண்டில் சீனு எவ்வித பதற்றமும் இன்றி அமர்ந்திருந்தான். அவன்மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது இக் கொலையை அவன் திட்டமிட்டுச் செய்தான் என்பது பொலீஸ் விசாரணையில் தெரியவந்தது.

புலன் விசாரணையில் பல சுவையான தகவல்கள் வெளிவந்தன.

தெமோதரை தேயிலைத் தோட்டத்தில் கணக்கப்பிள்ளை மாணிக்கம் கடமையில் மிகவும் கண்டிப்பானவர். இதன் காரணமாக தொழிலாளர் தன்வசம் பழனிக்கும் அவனது சகாக்களுக்கும் மாணிக்கத்தின் மேல் ஆத்திரம் இருந்தது.

தோட்டத்தில் சண்டியனாகக் கருதப்பட்ட சீனுவைக் கொண்டு மாணிக்கத்தை ஒழித்துக்கட்டத் திட்டமிட்டனர். சீனுவை அணுகிய போது அவன் தயக்கம் காட்டினான்.

அவர்கள் ஒன்று கூடி மது அருந்தியபோது, யார் மாணிக்கத்தைக் கொல்வது என்பதை லொத்தர் போட்டுத் தீர்மானிப்பது என்று முடிவு எடுத்தனர். அன்று இரவே பழனியும் அவனது மூன்று நண்பர்களும், சீனுவும் அம்மன் கோவிலில் கூடி லொத்தர் போட்டனர்.

சீனுவின் பெயர் வந்தது. சீனுவிற்குப் பெருமையாக இருந்தது. மீண்டும் மது அருந்தினான். ஐந்து லொத்தர் துண்டிலும் சீனுவின் பெயர் தான் எழுதப்பட்டதென்பது சீனுவிற்கு தெரியாது அவன் மது போதையில் இருந்தான்.

அடுத்ததாக வேலைக்குப் போன மீனாட்சி வாய்க்காலுக்குக் கழுத்து வெட்டப்பட்டு, விழிபிதுங்கிய நிலையில் இறந்து கிடந்த மாணிக்கத்தைக் கண்டு பயந்து லயத்திற்கு ஓடிப்போய் தகவல் கொடுத்தாள். பொலீஸாரின் புலன் விசாரணையில் செண்பகம் என்னும் பெண் கொடுத்த வாக்குமூலம் எதிரி சீனுவை வைத

நீதிமன்றத்துக்கு வந்த உண்மைச் சம்பவம்

செய்ய உதவியது

அரச சட்டத்தரணி ஆரம்ப உரை நிகழ்த்திய பின் முதலாவது சாட்சி செண்பகத்தை அழைத்தார் செண்பகம் தனது சாட்சியத்தில் தான் இரவு ஏழுமணிக்கு கோவிலுக்கு விளக்கு வைக்கப் போனதாகவும், எதிரியும் வேறு சிலரும் மதுபோதையில் அங்கு வரவே பயந்தில் உள்ளுக்குள் மறைந்து இருந்ததாகவும் சொன்னாள்.

அப்போது இறந்தவரின் பெயரை எதிரி கூறியதாகவும் லொத்தர் போடப்பட்டதாகவும் சொன்னார்.

குறுக்கு விசாரணையில் பதற்றமின்றிப் பதிலளித்தார்

கேள்வி: அன்று இரவேஏன் பொலீஸுக்கு அறிவிக்கவில்லை.

பதில்: இவர்கள் கொலைப் பொருளாகுமென தெரியாது. மனுசனைச் சாகடிக்கவும் லொத்தர் போடுவாங்களா சாமி?

அடுத்து சாட்சி சொன்ன தங்கத்துரை, தான் தன்னவர் பழனியின் நண்பன் என்றும் அன்று கோவிலிலே தானும் இருந்ததாகவும் லொத்தர் போட்டு சீனுவின் பெயர் வந்ததாகவும் சொன்னான். கொலை நடந்தவுடன் தான் தன் மறைவாகியதாகவும், பொலீஸ் தேடிக் கண்டு பிடித்ததாகவும் சொன்னான். எதிரியின் சட்டத்தரணி குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்வி: உன்னுடைய பெயர் லொத்தரில் எடுபட்டு இருந்தால் நீ தான் கொலையைச் செய்

(6ஆம் பக்கம் பார்க்க)

-விஸ்வம் பகுபதி

னான். எதிரியின் சட்டத்தரணி குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்வி: உன்னுடைய பெயர் லொத்தரில் எடுபட்டு இருந்தால் நீ தான் கொலையைச் செய்

(6ஆம் பக்கம் பார்க்க)

இவர்களை ஏன் கடிக்கின்றாய்?

குட்டை குளத்திலே குடம்பியாய் இருந்த நீயும்
செட்டை முளைத்து இன்று சொகுசாய்
பறக்கின்றாய்

● கட்டை மரத்திலே உன் ● கணவன்
இருக்கையிலே
சட்டையிடா என்னையேன் சந்திக்க வந்து
விட்டாய்

கீதங்கள் இசைப்பதனால் ✱'கியூலெக்ஸ்'
என்றிருரோ - நம்
✱பாதங்கள் வீங்கவென் பாதக நோய்
பரப்புகிறாய்?

மாதங்கள் பலபேரை மலேரியாவில் மடியவிட்டு
சேதங்கள் ஏன் இங்கு செய்கின்றாய்
✱✱ 'அனோபிலிசு?'

சுத்தம் இல்லாத சூழலில் வாய்ப்பாகி
சத்தம் செய்து பல சந்ததி(யை) பெருக்கிவிட்டு
இரத்தம் குடிப்பதற்கு (இ)ராக்காலம் வருகின்றாய்
— ஏன்

சித்தம் தனை கலந்து சினத்தை ஏன் தருகின்றாய்?
சினம் அதனில் அடிபட்டு சீக்கிரத்தில் இறந்து
போயும்

மனம் அதனில் சுத்தத்தில் மகிமைதனை தந்து நீயும்
சனம் அவர்கள் சுத்தத்தைச் சரியாக பேணுதற்கு—
உன்

இனம் அதனை அழிப்பதாலோ இவர்களை நீ
கடிக்கின்றாய்?

- கீதப்பிரியன் -

குறிப்புக்கள்:

● ஆண்நுளம்பு தாவரச் சாற்றையும் பெண் நுளம்பு மனித இரத்தத்தையும் குடிக்கும் என்று பொதுவாக கூறுவதுண்டு.

✱ கியூலெக்ஸ் என்ற நுளம்பு எமது பாதங்களை வீங்கும் வாங்கால் நோயைப் பரப்புகிறது.

✱✱ அனோபிலிஸ் என்ற நுளம்பு ஆட்கொல்லி மலேரியா நோயைப் பரப்புகிறது.

பய உணர்வைத் தவிர்த்தால் குழந்தைக்கு நயம் பல விளையும்

'தன்னலமின்மை' என்பது ஒரு கடைமுடிவான நன்னெறி சார்ந்த நெறிமுறையன்று இதனை எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக ஆராய முற்படுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அது தன்னியமற்றதாகவும் தெளிவற்றதாகவும் மாறிவிடும்.

சிறு பிள்ளைகளின் பழக்கவழக்க முறைகளை உற்று நோக்கும் போது இவ்வுண்மை எமக்குப் புலப்படும். வயதிற் கூடிய பிள்ளையோ வலுவிற் கூடிய பிள்ளையோ தன்னிலும் வயதிற் குறைந்த அல்லது வலுவிற்குன்றிய பிள்ளையிடமிருக்கும் விளையாட்டுப் பொருள்களைப் பறித்தெடுப்பதை அல்லது நட்டிப்பறிக்க முனைவதைக் காண்கின்றோம்.

வயதிற்கூடிய பிள்ளை வயதிற் குறைந்த பிள்ளைக்குக் கொடுக்கப்படும் அக்கறையைவிடக் கூடிய அக்கறை தனக்குக் கிடைக்கவேண்டுமென எதிர்பார்க்கிறது. மனிதனது 'நான் அல்லது தனது' என்ற முனைப்பானது வெறும்பொருள் (Property) சார்ந்த முனைப்பாக முதலில் தொடங்கி அதுவே காளைப்பாலில் வாயு போற் பரந்து விரிந்து வளர்ச்சி பெறுகிறது. இதனை நாம் ஆரம்ப காலங்களில் புற அழுத்தங்களாலேயே கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

இப் புறவழுத்தங்கள் குழந்தைகளை ஒடுக்கி அடக்குபவையாக அமைதல் கூடாது இவை குழந்தைகளின் மனங்களில் நல்ல பழக்கவழக்கங்களையும் எண்ணங்களையும் தோற்றக்கூடியவையாக இருத்தல்வேண்டும். இவற்றை நல்ல முறையில் புகட்டக் கூடியவாறே குழந்தைகளின் கல்விமுறைகள் அமையவேண்டும்.

இதனை விடுத்துப் பிறர் பொருளில் அவாக்

உளவியல்

கொள்வதைத் தடுப்பதற்காகக் குழந்தைகளை மிரட்டுவதாலோ குட்டுவதாலோ, அடிப்பதாலோ, தண்டிப்பதாலோ எல்லித ஆக்கபூர்வமான பலனுமேற்படப் போவதில்லை.

குழந்தைப் பருவத்திலேயே அதனது மனதில் நேர்மை, முறைமை, நீதி, முறைதவறு நடத்தை, ஒப்புரவு ஆகிய நற்பண்புகளை வலுக்கட்டாயமாக இல்லாமல் மிகவும் நிதானமாகவும் நுட்பமாகவும் அதன் மனதிற் பதியும்படிக் கல்வியைப் போதிக்க வேண்டுமேயன்றித் தன்னை விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கினை வலுக்கட்டாயமாக அதனிடத்தில் திணிக்கக்கூடாது. காரணம் தன்னலவிட்டுக்கொடுக்கும் பாங்கானது இயற்கை முழுதளாவிய முழுமொத்த விரிவுடைய கொள்கையாகாது.

பொய்ம்மையை நற்பண்பென்று என்றுமே போதிக்கக்கூடாது. ஏனெனில் பொய்ம்மையைப்பொய்ம்மையெனக் காணும் பருவத்தைக் குழந்தையொன்று அடையும்போது நற்பண்பென்ற உணர்வு அதன் மனதில் நிற்காமல் மறைவுறும்.

எனவே தக்க கல்விமுறையால் குழந்தையொன்றின் பிஞ்சு மனத்திலே நேர்மை, முறைமை, ஒப்புரவு, நீதி ஆகியன இயல்பாகவே,(புறவழுத்தங்களின் கடுந்தாக்கங்கள் குழந்தையின் மனத்தைக் பாதிக்காதவண்ணம்) பதித்திரமாகப் புகட்டவேண்டிய பாரிய பொறுப்பு பெற்றோரதும் ஆசிரியர்களதும் கடமையாகும்.

தனி மாணுக்கன் ஒருவனுக்கு மாத்திரம் நேர்மையை – நீதியை – ஒப்புரவைப் போதிப்பது கடினம்.

முறைமை, நீதி, ஒப்புரவு ஆகியவற்றுடன் தொடர்புடையதே பொருள் அல்லது சொத்து (Property) பற்றிய புலனுணர்வாகும். [illegible] மனிதனை விடுமுறைகளினூடாக [illegible] ஏற்படுத்துவதை முற்றிறனுடைய சாமர்த்தியத்துடனேயே அணுக வேண்டும். பொருள் அல்லது சொத்து மீது கொண்டுள்ள பற்றானது ஒருவருடைய பிற்கிய வாழ்க்கையிற் சிலவேடு கலையும் கொடுமையினையும் உருவாக்குகின்றது.

அருமையாகப் பேணிக் காக்கப்பட்ட பொருளின் உடைமையை இழக்க நேரிடலாமென்ற அச்சமே பொருளாதார அரசியல் குழப்பங்களுக்கும், கெடுபிடிகளுக்கும், சிக்கல்களுக்கும் மூலமாக அமைகின்றது.

தனியார் உடைமை உரிமைக்கு உட்படாத முறைகளிலேயே மனிதன் மகிழ்ச்சியை அடையவேண்டும். பொருள் உடைமை பற்றிய [illegible] [illegible] ஏற்படுத்தவதை யாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

காணும் பொருள்களைக் கையால் சட்டெனப் பற்றும் தன்மையைச் சிறு பிள்ளையானது இயல்பாகவே இயல்புணர்ச்சியாகத் தன்னுள் வளர்த்துக் கொண்டு விடுகிறது. இது கை-கண் சமநிலைப் பாட்டுடன் கூடிய ஒருங்கிணைப்பாக செயலுருப் பெறுகிறது. இதனாற்றான் ஆங்கிலத்தில் 'சொத்தை' அதாவது 'Property' யை 'Holding' என்றும் 'Maintenance' என்றும் அழைக்கின்றனர் என்பதை நோக்கவேண்டும்.

'Holding' 'Maintenance" ஆகிய இரு சொற்களும் சொத்தோடு மனிதன் தனது கையால் பற்றும் பாங்கோடு நாகரீக முதிர்ச்சியற்ற காலத்திற்குரிய தொடர்பை யாம் ஓரளவிற்கேனும் அறிந்து கொள்ள சிக்கூடியதாக உள்ளதல்லவோ?

விளையாட்டுப் பொருள்கள் இல்லாத குழந்தைகள் சிறு தடிகளையோ, கடுதாசித் துண்டுகளையோ, பழைய புத்தகங்களையோ, புவியல் கொட்டைகளையோ, வேறு பொருள்களையோ தங்களுடைய பொருள்களாக- சொத்துக்களாக மிகவும் பவித்திரமாக பேணிக்காக்கும் பாங்கினை அவர்களிடம் காண்கின்றோம்.

சொத்துமீது குழந்தையே தங்கள் சொத்துக்கள் தங்களிடம் நீங்கக் கூடாதென்றோ அழியக்கூடாதென்றோ எண்ணவைத்து அதனைப் பேணிப் பாதுகாப்பதில் அவர்களை முற்றுமுழுதாக ஈடுபடச்செய்கிறது.

சிறு பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் விளையாட்டுப் பொருள்களுள் சில அவர்களுடைய சொத்துப் பொருளாகவும் சிலபொதுப்பொருள்களாகவும் இருத்தல் வேண்டும்.

உதாரணமாக ஆசைத்தாடும் விளையாட்டுக் குதிரையொன்று பிள்ளையைப் பொறுத்தமட்டில் பொதுச் சொத்தாக இருக்கவேண்டும். ஆனால் ஒரு பொதுச்சொத்தென்றும் குழந்தைகள் ஒவ்வொருவரும் அதனைத் தனியுரிமை கொண்டாட முடியாதென்றும் அஃதனையவருக்குமே சமஉரிமையானதென்றும் உணரவைக்கவேண்டும்.

இப்படி மெதுமெதுவாக குழந்தைகளின் மனங்களிலே பொதுச் சொத்தென்ற எண்ணத்தை வளர்க்கவேண்டும். அப்பொழுதுதான் பிள்ளையொன்றிற்கு தனது தனிச்சொத்துக்கும் பொதுச் சொத்துக்

-கந்தையா நவரேந்திரன்-

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைராக்கியப் பாடகி

பின்னணிப் பாடகி எஸ். பி. ஷைலஜா சலங்கை ஒலியில் நடித்த பின் வேறு படங்களில் நடிக்கவில்லை.

இவரைத்தேடி பட வாய்ப்புக்கள் வந்தன. பாக்கியராஜா, பாரதிராஜா கூட இவரை நடிக்க அழைத்தனர் ஆனால் மறுத்து விட்டார். "ஒரே ஒரு படத்தில் மட்டும் நடிப்பேன் என்று சொன்னேன். அதுவும் இயக்குனர் விசுவநாத் எங்கள் உறவினர் என்பதால், வேறு எந்தப் படத்திலும் நடிப்பதாக இல்லை" என்றார் ஷைலஜா.

தமிழர் ஏற்கக்கூடிய...

(8ஆம் பக்க தொடர்ச்சி)

கள் வரிவுறுத்தகின்றன.

திட்டமிட்ட குடியேற்றம்

1920களில் கிழக்கு மாகாணத்தில் 2 சத வீதமே சிங்கள சனத்தொகை என்று இதற்குக் காரணம் காட்டப்படுகிறது. குடியேற்றத் திட்ட நிகழ்ளுல்தான் சிங்களவரின் சனத்தொகை 26 வீதமாகத் திட்டமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது

தேசிய ஒற்றுமைக்கு சரியான அதிகாரப்பரவலாக்கல் தேவை என்றும்—

இது விஷயத்தில் இந்தியாவிடம் இருந்து இலங்கை பல விஷயங்களை அறிந்து கொள்ள முடியும் என்றும் கொழும்பில் இருந்து இயங்கும் தேசிய ஒற்றுமைக்கான பிரசைகள் குழு கூறுகிறது.

கனடா அரசமைப்பு முறையையும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ள முடியும்.

கனேடிய முறை

எவ்வளவோ நெருக்கடிக்கு மத்தியில் கனடா கொண்டு வந்த அரசமைப்புச் சட்டத்தின் கீழ் பிரெஞ்சு, ஆங்கில தேசிய இனங்கள் சமஅந்தஸ்துடன் வாழ்கின்றன.

குயுபெக் இறைமை உள்ள மாநிலமாக இருந்தும் கனடாவுடன் இணைந்தே உள்ளது

உண்மையான சமஷ்டி அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வர இலங்கை அரசு தயாரா? பூரண சுதந்திரத்துக்குக் குறைந்த தீர்வு ஒன்றைக் காண தமிழரும் தயாரா?

அரசியல் கட்சிகள் மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த யோசனைகளில் வடக்கு, கிழக்கு இணைந்த தமிழ்மொழி மாநிலமே வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்தியா அல்லது அமெரிக்கா மாதிரியான அரசமைப்பு போன்ற திட்டத்தினை நிராகரித்தால் பிரிவினைக் கோரிக்கை மறைந்து விடும்.

சுய நிர்ணய உரிமை பற்றிய விஷயத்தில் ஐ நா. விதிகள் தெளிவாக உள்ளன. பெரும்பாலும் சம்பந்தப்பட்ட பிரதேசத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர்களையே ஐ நா அதரித்து வருகிறது.

ஐ. நா. எதிர்ப்பு

ஐயாரே, நைஜீரியா, ஆகிய இடங்களில் இடம் பெற்ற சிவில் யுத்தங்களின் போது ஐ நா. பிரிவினையை எதிர்த்தது எரித்திரியன் சுதந்திரப் போராட்டத்துக்கு ஐ நா. ஆக்கமளிக்கவில்லை.

சிறுபான்மை இனம் தனது பூரண சுதந்திரக் கோரிக்கையைக் கைவிடுவதற்கு அரசாங்கம் எவ்வித சலுகைகளை வழங்கவேண்டும்?

வெறும் மாகாண சபாமுறை சரிவராது இந்திய, கனேடிய அரசமைப்பு வல்லுநர்களின் ஆலோசனை பெறப்பட்டு அதிகாரப் பகிர்வு முறைவகுக்கப்படவேண்டும்.

கடந்த 60 ஆண்டுகளாக காலத்துக்குக் காலம் இலங்கையில் சமஷ்டி அரசமைப்பு பற்றி ஆலோசிக்கப்பட்டு வந்துள்ளது

1926 இல் அமரர் பண்டாரநாயகா சமஷ்டி அரசமைப்புப் பற்றித் தெரிவித்தார்

1928 இல் டொனமூர் கமிஷன் மூன்று வகுப்பாட்சி அரசுகள் கொண்ட சமஷ்டி அரசமைப்பை வலியுறுத்தியது. இவற்றில் வடக்கு, கிழக்கு இணைந்த ஒன்று.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றபோது இந்த ஆலோசனைகள் நடைமுறைப் படுத்தப்படவில்லை

இன, மொழி, மத கலாசார வேறுபாடுகள் பற்றி தெரிந்திருந்தும் ஐரோப்பிய நாடுகள் ஒற்றையாட்சி அரசமைப்பு முறையையே தயாரித்தன.

இந்த முறையினால் பெரும்பான்மை இனத்தின் ஆட்சிமுறையே நிலைநிறுத்தப்படுகிறது. இது இலங்கையில் மட்டுமல்ல, மலேஷியா, கயானா, செப்பிரஸ் நாடுகளிலும் நிலவுகின்றது

—தவறுகளைத் திருத்துவதே இலங்கை அரசுக்கு இன்றுள்ள ஒரே வழி. ★

எனது நடிப்பு தனிப்பாணி

மற்றவர்களை பின்பற்றுவதில்லை

எனது நடிப்பு தனிப் பாணி மற்றவர்களின் பாணியை நான் பின்பற்றுவது இல்லை. பொதுவாக ஹீரோ என்றால் ஜோடி இருக்க வேண்டும். ஆனால் நான் ஜோடியே இல்லாமல் படங்களில் ஒப்புக் கொண்டு நடித்தேன்.

இப்படிக் கூறுகிறார் நடிகர் சத்தியராஜ்

அவர் மேலும் கூறுகையில்,

எம். ஜி. ஆர் படத்துக்கு மவுசு

தமிழக திரையரங்குகளில் இப்போது எம் ஜி ஆரின் படங்கள் திரையிடப்படுகின்றன

அப்போது ரசிகர்கள் முண்டியடித்து படம் பார்த்தது போல் இப்பொழுதும் இந்தப் படங்களைப் பார்க்கின்றனர்

சத்தியராஜ் சொல்கிறார்

நான் ஜோடியே இல்லாமல் நடித்த படங்களும் வெற்றி பெற்றிருக்கின்றன.

'விடிஞ்சா கல்யாணம்', 'மந்திரப் புன்னகை' போன்ற படங்களில் எனக்கு ஜோடியே கிடையாது. பாலைவன ரோஜாக்களில் எனக்கு லட்சுமி ஜோடி என்றாலும் நாங்கள் தொட்டுக் கொள்ளவில்லை இதனால் நான் 'டூயட்' பாடினால் ரசிகர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதில்லை 'இரவுப் பூக்கள்' படத்தில் 'டூயட்' பாடி நடித்தேன். அந்தப் படம் வெற்றி பெற்றது

நான் என் படங்களில் விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கிறேன்.

கடந்த தீபாவளிக்கு மட்டும் நான் நடித்த

கும் முத்துக்கள் மூன்று படத்தில் அம்பிகா ரவிக்கையின்றி புடவை கட்டி நடிக்கிறார்.

அம்பிகாவின் கவர்ச்சி

சிவாஜி, சத்தியராஜ் [illegible] நடித்த

முடியாத காரணங்களினால் இரண்டு படங்கள் வெளியாகின.

என் நல்ல நேரம் அந்த இரண்டு படங்களுமே

தயாரிப்பு பேரின்பம்

நன்றாக ஓடி என் பெயரைக் காப்பாற்றி விட்டன.

இப்படிக் கூறினார் சத்தியராஜ்

அமலாவின் நன்றி

பத்திரிகைகளில் நடிகைப் பற்றிய செய்தி வந்தால் அந்த அந்தப் பத்திரிகையாளருக்கு மறக்காமல் நன்றிக் கடிதம் எழுதுகிறார் நடிகை அமலா

வெள்ளித் திரையில்

பரஸ்பர புரிந்துணர்வுடன் வேலைகளை பகிரவேண்டும்

குடும்பப் பெண்கள் வேலைக்குச் செல்வது பற்றிய பேட்டி வரிசையில் இவ்வாரம் ஐந்தாவது பெண் ஒருவரின் பேட்டி வெளியிடப்படுகின்றது

-பெண் டாக்டரின் ஆலோசனை

குவியாப் பிட்டி, மட்டக்களப்பு, சுண்டுக்குளி பாடசாலைகளில் படித்தவரும் மூன்று பிள்ளைகளின் தாயாரும் பகுதிநேரமாக நோயாளர் தொடர்பாக விரிவுரையாற்றி வருபவரும் யாழ் பெரியாஸ்பத்திரியில் கடமை புரிந்து வருபவருமாகிய டாக்டர் திருமதி நிலவதி குணாசன் அவர்கள் கூறியது

கே: பெண்கள் தொழில் பார்ப்பதால் குடும்ப பராமரிப்பு, குடும்ப வளர்ச்சியில் பாதிப்புண்டு என நினைக்கிறீர்களா?

ப: நிச்சயமாக. பிள்ளைகளின் மனவளர்ச்சி பாதிப்புறுகின்றது. உதாரணமாக ஒரு நிகழ்வு. பாடசாலை விட்டு அவர்கள் வீடு வந்ததும் தாங்களே தங்கள் வேலைகளைச் செய்ய வேண்டுமே என்ற ஒரு வெறுப்புணர்ச்சி அவர்களிடம் ஏற்படும். சிறுவயதிலேயே வீட்டுப் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது

இவ்வாறு இருந்தாலும் இதனால் நன்மை

யும் உண்டு. சிறுவயதில் தமக்குத் கிடைக்கும் அனுபவத்தின் மூலம் பிள்ளைகளின் பொது அறிவை வளர்க்கக்கூடிய வாய்ப்புக் கிட்டுகிறது. முதலில் கஷ்டப்பட்டாலும் நாளாக நாளாக அவர்கள் புரிந்து நடக்கத் தொடங்குவர்.

கே: வேலைக்காக எவ்வளவு நேரத்தைச் செலவிடுகிறீர்கள்?

ப: காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை. சிலசமயம் வீட்டுப் பிரச்சினையால் அங்கு நடைபெறும் வேலை பாதிக்கத்தான் செய்கிறது

கே: தற்போதைய சூழலில் சிரமமில்லாமல் வேலைக்குச்சென்று வேலை செய்ய முடிகிறதா?

ப: இல்லை. சிரமத்தின் மத்தியிலும் அதனைச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது

கே: வேறு பாதிப்புகள்?

ப: பல. சில குடும்ப வேலைகளை நிறைவேற்ற முடியாதுள்ளது வேலை முடிந்து வந்தும் நாளை பல வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதால் (அத்தியாவசிய தேவைகள்) பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிட முடிவதில்லை

கே: இப்பிரச்சினையை நிவர்த்தி செய்ய வேலைக்காரர்களை வைத்திருக்க விரும்புகின்றீர்களா?

ப: ஆம் ஒரளவு வேலைச்சுமையைக் குறைக்கலாம்; பிள்ளைகளுடன் கூடியளவு நேரத்தைச் செலவிடலாம்; இருவேலைகள் செய்வதால் ஏற்படும் களைப்பைத் தவிர்க்கலாம். ஆனால் நம்பிக்கையான வேலைக்காரர்கள் அதற்குத் தேவையே?

கே: நீங்கள் தொழிலுக்குச் செல்வதால் பிள்ளைகளுடன் செலவழிக்க நேரம் போதுமுடிவதில்லை

கே: இதனால் பிள்ளைகளின் பாசம் குறையும் என்று நினைக்கின்றீர்களா?

ப: இல்லை. அவர்கள் நாளாக ஆக நாங்கள் வசதியாக இருப்பதற்கே பெற்றோர் இப்படிக் கஷ்டப்படுகிறார்கள் என்பதை உணரும்போது மனநிலையை நெறிப்படுத்தி சரியாக மாறி விடுவார்கள்.

கே: வைத்திய தொழிலோடு சமூகக் கடமைகள் செய்ய முடிகிறதா?

ப: ஓரளவே முடிகின்றது

கே: வைத்திய பெண் (7 ஆம் பக்கம் பார்க்க)

பேட்டி:
இ. சுலோசனா

பிரிச்சிலம்பம்

போட்டி இல. 59



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி .....

.....

வயது: .....

விலாசம் .....

.....

ஒப்பம் .....

போட்டி விதிகள்

பிரிச்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

இடமிருந்து வலம்

1. பிரதிக்கினை
5. பல்லி
6. மரணம்
9. இழிச்சிச்சொல்
10. சமையலிற் கருகியது இனிக்கும் கருக்கி விட்டது
11. சிவன்
13. தந்திரம்
14. கோவில்
15. சினம்
17. வேல்வி
18. நியாயம் உரைக்கும் சபையோர் குழாம்பியுள்ளவர்

மேலிருந்து கீழ்

1. பாண்டவர்களில் ஒருவர்
2. அறிவு
3. பாவிரம் முடிய விக்கல்
4. காவியின் அருள் பெற்ற புலவன்
7. சவுக்கு
8. தகுதி
10. விளக்கும் நரம் புகளையும்
11. ஆபத்து
13. அனேக பெண்களுக்கு இது வைவந்தவுடன் இல்லை முதலெழுத்து இல்லை
13. பூமிக்குக் கடைசி எழுத்து இல்லை
14. செவிலித்தாய்
15. நிரை
16. அழகு தங்கிழோகி உள்ளது

சொற்சிலம்பம் இல. 57 விடைகள்

இடமிருந்து வலம்

1 ஆகமம் 4. தீயோன் 6. பருகி 7. தமிழ் 8. மைதானம் 10. தரு 12 கானு 13. தும்பா (யாதும்) 16 சகீனா 18. நம்பிக்கை 20. வாதாபி 22 ரதி 24 மிந் 25 நீதி 26 நிரை

மேலிருந்து கீழ்

1. ஆபத்து 2 கரு 3. மகிமை 4. தீபம் 5. போசி 7. தனம் 9 அனுமை 11. குத 12. காரிகை 14 மந்பி (நம்பி) 15 யாம் 16. சக்தி 17. கயாமி 19. பிரதி 21. தாரி 23 பிறை

சொற்சிலம்பம் இல. 57

சரிவர பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு:- செல்வன் சகோதரன் ஞானசேகரம் மே/பா.உ. பேராளந்தராசா, பிராமணோடை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

இரண்டாம் பரிசு:- செல்வி து. மஞ்சுளா, 200, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாம் பரிசு:- செல்வி உமாதேவி விஷ்ணுசந்தரம், யாழ்வீதி, வல்வெட்டித்துறை

★ பரிசு பெற்றவர்களுக்கு உரிய பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரிலாவும் வரவேண்டியதில்லை.

எதுகைக்காகக் கவிஞன்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

தில் 'மல்லிகை' சஞ்சிகையில் கவிதைகள் பெருந்தொகையிலிருந்தன. 1972 இல் தென்னிலங்கையில் 'புதுக்கவிதை ஏடு' (க. வி. ஏ) தோன்றியது. நிவக்கவி சமால் நீர்கரைதம்பி, சம்ஸ் ஆகியோர் எழுதினர்.

அரியாலையூர் ஐயாத்துரை, சொக்கன், முருகையன், நுஃமான், ம. பார்வதிநாதசிவம், க. சச்சிதானந்தன், கல்வயல் வே குமாரசாமி, செ. குணரத்தினம், பா. சத்தியசீலன், சண்முகம் சிவலிங்கம், இ. சிவானந்தன், வே. பரமநாதன், ஜீவா ஜீவரத்தினம், காரை செ. சுந்தரம் பிள்ளை, வி. கந்தவனம், நாக. பரமசாமி, ச. வே பஞ்சாட்சரம், வ. கோவிந்தபிள்ளை, ஈழவாணன், பாண்டியூரன், நாவற்குழியூர் நடராசன், நாக சண்முகநாதபிள்ளை ஆகியோர் மரபுசார்ந்த கவிதைகளை எழுதுவோராகவும், சபா ஜெயராசா, சேரன், வ. ஐ ச. ஜெயபாலன், ஹம்சத்வனி (தமிழ்ச்செல்வன்), அ யேசுராசா, மு பொன்னம்பலம், நகபத்தி, புதுவை இரத்தினதுரை, பசுபதி, சுபத்திரன், மருதூர்க்கனி, பண்ணாமத்துக் கவிராயர், மு. சடாட்சரன், பஷீர் காரியப்பர், ஏ இக்பால், அன்பு முகையதீன், க. துரைசிங்கம், மேமன்கவி, மு. கனகராசன், அன்பு ஜவஹர்ஷா ஆகியோர் புதிய நவீன கவிதையாளராயும் விளங்குகின்றனர்.

சமகாலத்திலே இவர்கள் பற்றிய விமர்சனங்களும் வெளிவந்து வாசகர்களை நெறிப்படுத்துவதாயுமுள்ளது.

இன்றைய பத்திரிகைத் துறையில் வளர்ச்சி வேகமும், சஞ்சிகைகளின் பெருக்கமும், வாசகர்களின் வாசிப்புப் பரியும் தமிழ்க் கவிதையையும் பாதித்துள்ளதென்பதனைக் கண்டுகொள்ள வேண்டும்.

அண்மைக் காலங்களிலே பேராசிரியர்கள் க வித்தியானந்தன், ஆ. வேலுப்பிள்ளை, கா சிவத்தம்பி, அ சண்முகதாஸ், சிவசேகரம், பொ பூலோகசிங்கம், சி நித்தியானந்தன், கலாநிதிகள் க செ. நடராசா, சபா. ஜெயராசா, செ. கிருஷ்ணராசா, நா. சுப்பிரமணியன் போன்றோர் தமிழ்க்கவிதைத் தடம்பற்றி அடிக்கடி ஆய்வு செய்து எழுதியும் பேசியும் வழிகாட்டி வருகின்றனர்.

எது தமிழ்க்கவிதை? என்பதுவே சாதாரண வாசகனது கேள்வி இன்னும் கவிதை பாட இசை வேண்டாமா? மரபுக் கவிதையின் அடித்தளம் புரிய வேண்டாமா? சந்தம் அடியோடு வேண்டாமா? எல்லாம் பச்சையாக – கொச்சையாகவே தான் இடம்பெற வேண்டுமா? பாவியல் கவிதைக் ஒப் பொருளா? எல்லோருமே கவிதை பாடி விடலாமா? ஆயின் இன்று யார் கவிஞன்?

இவையே நம் அனைவர் முன்னுமுள்ள வினாக்கள் யார் கவிஞன் என்பதை யார் தீர்மானிப்பது!

★

சர்வபலம்---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தூரத்தில் வெகுவேறு திசைகளில் நங்கூரம் பாய்ச்சிவிட்டு, கடற்குதிரைகளிலிருந்து அவைகளை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து பயிற்சி மேற்கொண்டிருந்த நல்லூர் படைவீரர்கள் நேரம் மதியமாகி விட்டதால் பயிற்சியை நிறுத்திக் கொண்டு தம் கடற்குதிரைகளை கரையை நோக்கி வலித்திருந்தார்கள்

கடற்குதிரைகள் கரையை அடைகின்றன கோட்டைக்குச் செல்கிறார்கள் பருந்து துறைக்கு வந்து சேர்கிறது. பூவரச மரங்களில் கட்டப்பட்டிருந்த தம் குதிரைகளை அவிழ்த்துக்கொண்ட நல்லூர் படை வீரர்கள் நல்லூர் கோட்டைக்கு விரைகிறார்கள்.

(வளரும்)

பய உணர்வைத் தவிர்த்தால்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

கும் இடையே உள்ள வித்தியாசம் கொஞ்சம் கொஞ்சமாகப் புலப்படும்.

பொதுவாக விளையாட்டுப் பொருள்களைக் குழந்தைகளுக்குக் கொடுக்கும் போது வயதிற்கூடிய பிள்ளைக்கு விலைகூடிய நுட்பமான விளையாட்டுப் பொருள்களைக் கொடுத்தும் வயது குறைந்த பிள்ளைக்கு விலை குறைந்த இலகுவிற் பழுதடையாத தன்மையுடைய விளையாட்டுப் பொருள்களைக் கொடுத்தும் வயதுக் குறைந்த பிள்ளைகளுக்கு ஒரே வேறுபாட்டை குழந்தைகள் அவதானிக்கிறார்கள்.

எமது செயற்பாடுகளுக்கான காரணத்தை மிகவும் நுட்பமான முறையில் குழந்தைகள் புரிந்து கொள்ளும் வகையில் நாம் அவர்களுக்கு எடுத்துரைக்கவேண்டும் இஃது ஆசிரியர்களினதும் பெற்றோரினதும் மிகமுக்கிய கடமைகளுள் ஒன்றாகும் இதன்மூலம் குழந்தைகளுக்குத் தனது வயது, தேவை, நிறமை, வல்லமை ஆகியவற்றிற்கு ஏற்றபடியே தனிப்பொருள் அல்லது சொத்து கிடைக்கும்—தேவை—என்ற கருத்து அதன் மனதிற் பதியும்.

அதேவேளை பொதுச் சொத்திலே பொதுத்தன்மையையும் முக்கியத்துவத்தையும் [illegible] விளக்கி [illegible] ஒரு எழுதி

மனுஷனை...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

திருப்பாய்?

பதில்: என் பெயர்வரா துங்க. எல்லாத் துண்டிலேயும் சீனுவின்பெயர் தானே எழுதினுங்க.

அடுத்து பிரேத பரிசோதனை செய்த டாக்டர் சாட்சியமளிக்கையில், எழுந்து வெட்டப்பட்டு தொங்கியதாகவும் உடம்பில் பதிந்திருக்கு மேற்பட்ட காயங்கள் இருந்ததாகவும் சொன்னார் கழுத்தில் ஏற்பட்ட காயம் உடல் மரணத்தை ஏற்படுத்தி விருக்கும் என்றார்.

அடுத்த தரகப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் சாட்சியமளிக்கையில், கோவிலில் இருந்து ஐந்து கடதாசித் துண்டு [illegible] கிடைக்கப்பட்ட தாகவும், எல்லாவற்றிலும் ஒரு ஒரு எழுதி விருந்ததாகவும் சொன்னார். எதிரியின் வீட்டுக் கூரையில் இருந்து கொண்டு செய்யப் பாவிக்கப்பட்ட வரிகள் கண்டெடுத்ததாகவும், இரத்தக்கறை படிந்த அந்த வாள் நீதிமன்றத்தில் சான்றுப் பொருளாகச் சமர்ப்பிக்கப்படுகின்றது என்றார்.

அரச சமிட்சகரான தனது தொழுப்புரையில் சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்கள் இக்குற்றச் செயலை இந்த எதிரி தான் புரிந்தார் என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கின்றன என்றார்

சாட்சியங்களையும், தொழுப்புரைகளையும் ஆராய்ந்த ஜூரர்கள் எதிரிகுற்றவாளியென தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரிக்கு மரணதண்டனை விதித்தார். ★

சிரங்கு ஒரு சமூக...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

புக்குள்ளாகிய இடங்கள் சரிவரச் சமூலப்படுவதில்லை.

2 சில நோயாளர்கள் இரண்டாம் நாளே மருந்து பூசுவதில்லை. அத்துடன் உடல் பூராகவும் மருந்து இரு நிமிடங்களாவது சரிவரப் பூசப்படுவதில்லை. பூசிய மருந்து முற்றாக உலரும் வரை விடுவதில்லை.

3. ஒரு வீட்டில், பலர் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பின் ஒரே நேரத்தில் யாவரும் சிகிச்சை பெறுவதில்லை.

4 நோயாளர் பாவித்த உடுபுடைவைகள் கொதித்த நீரில் அவிக்கப்படாது விடுதல்.

5. சீழ் கட்டிய கொப்புளங்கள் இருப்போர் பீ. பீ. கிறீம் பூசுவது மாத்திரம் போதா. வைத்தியரின் ஆலோசனையில் வேறு மருந்தினும் எடுக்க நேரிடலாம்.

நோய்த்தடையும் மக்கள் விழிப்பும்

சிரங்கு ஒரு சமூகப் பிரச்சினை எவ்வொருவரும் இந்நோய் பரவும் விதம், அதற்குரிய சிகிச்சை சம்பந்தமாக நன்கு அறிந்திருத்தல் வேண்டும். நோயாளர் கண்டுபிடிக்கும் இடங்கண்டு தகுந்த சிகிச்சை அளித்தல் வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் பூரண சிகிச்சையின் பின்பே பாடசாலைக்குச் செல்லுதல் வேண்டும்.

தனிநபர் சுத்தம் பேணப்படவேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாலி முகாம் பாதுகாப்புப் படையினரால்

பாதிக்கப்பட்டோரின் பரிதாப நிலை!

மீன்பிடி, விவசாயம், கைத்தொழில் கல்வி, வாழ்க்கை நிலை பாதிப்பு

தந்தையோ கண் வறையில், தம்பியோ சிறையறையில், தாயோ மனநோய்ப்பிரிவு அறையில், குடும்பச் சுமையோ இளம்பெண் ஒருத்தியின் இதய அறையில்—

திராணுவ முகாம் விஸ்தரிப்புக் கெடுபிடியால் தமது பாரம்பரிய வசிப்பிடத்தை விட்டு இடம் பெயர்ந்தது, அவலாரின் வாடகை வீட்டில் குடியமர்ந்தது அந்தக் குடும்பம்.

பிறந்த ஊரை விட்டு, செய்த தொழிலைவிட்டுச் சென்றதால் வருவாயின்றித் தத்தளித்துத் தடுமாறியது

சகோதரிகளின் நலனை விற்று சகோதரனை அனுப்பினர் வெளிநாடு செல்ல—

வெளியே செல்லச் சென்றவனை பொலீஸார் கொழும்பில் வைத்துப் பிடித்தனர் விசாரணைக்காக

இன்றுவரை விசாரணையுமில்லை; எங்கேயென்ற விலாசமுமில்லை.

மகனை நினைத்து நினைவு இழந்தாள் தாய்

உயிருக்கு அஞ்சி ஊரை விட்டு ஓடினாலும் விதி விடவில்லை. அது ஹெலியில் வடிவில் தரத்தி வீட்டுவாசலிலேயே தந்தையையும் துடிதுடிக்கப் பலிகொண்டது

மூன்று இளம் தங்கைகளையும் இரண்டு சிறு தம்பிகளையும் பராமரிக்கும் பாரம் மூத்த பெண் மீது விழுந்தது.

வாழவும் முடியாமல் மாளவும் முடியாமல் தவிக்கிறது அந்தக் குடும்பம்.

* * *

இன்று குடாநாட்டுக்குள் பல இராணுவ முகாம்கள் படிப்படியாக விஸ்தரிக்கப்படுகின்றன.

இவ்விஸ்தரிப்பால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

அக்குடும்பங்களில் சிலவற்றை சஞ்சீவி வாசகர்களுக்காகச் சந்தித்த போதே மேற்படி குடும்பத்தின் சோகக் கதையையும் அறிந்தோம்.

இக் குடும்பத்தவர்கள் பலாலி முகாம் விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டு வயாவிளானை விட்டு இடம் பெயர்ந்தவர்கள்.

இன்று இலங்கையின் மிகப் பெரிய முகாமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது பலாலி இராணுவ முகாம்.

முன்னூறு முன்னூறு இராணுவத்தினர் மட்டும் இருந்த முகாமில் இன்று?.....

ஒரு சதுரமைல் பரப்பில் இருந்த முகாம் இன்று பல சதுரமைல் பரப்புக்களாக விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

வாழ் குடாநாட்டின் செழிப்பான செம்மண் பகுதியையும், அதிளவு ஆழ்கடல் மீன்பிடி வளத்தையும், அழகான அடுக்கு மாடி வீடுகளையும் கல்வி சாலைகளையும் கொண்டிருந்தது முகாமின் சுற்றுடல்.....

பலாலி ஆசிய கலாசாலை, தொலைக்காட்சி ஆய்சிரமம், பலாலி, மயிலிட்டி மீன் சந்தை, விமானநிலையம், தெல்லிப்பளை வைத்தியசாலை இவைகளால் இப்பகுதி ஊர் சந்திகளில் ஒப்போதும் ஒரு சந்தோஷத்தின் சாயல் குடியிருந்தது.

இன்று அந்த சந்தோஷம் எங்கோ பரதேசம் போய்விட்டது.

கல்விமான்கள் பலரின் கல்விக்கு அத்திவாரமான பல பள்ளிகள் அத்திவாரத்தோடு காணப்படுகின்றன.

தகர்க்கப்பட்ட பல வீடுகள் விட்டத்தோடு இறங்கி நிலமட்டத்தோடு காணப்படுகின்றன.

கட்டுவன் பகுதியில் தகர்க்கப்பட்ட ஒரு வீட்டு உரிமையாளரான ஆசிரியர் ஒருவரைச் சந்தித்தபோது அவர் பேசமுடியாது கலங்கித் தவித்தார்.

அவரது பேசமுடியாத அந்த கலங்கிய மௌன நிலையை அவரது துயர நிலையை எடுத்துரைத்தது

சோனவனமாக காட்சி யளித்த தோலகட்டிப் பகுதி இன்று பாலைவன மரக் காட்சியளிக்கின்றது.

பயன்தரு பாக்கு மரங்கள் மொட்டையாகவும், நிழல் தந்து பரந்து படர்ந்த மரங்கள் இன்று பட்டையாகவும் காட்சி அளிக்கின்றன.

மொட்டை மரப் பொந்துகளில் இருந்த மறவன்கள் கூட அடிக்கடி பேட்டும் துப்பாக்கிச் சத்தங்களுக்குப் பயந்து கூட்டை விட்டுப் பறந்தோடிப் போய் விட்டன.

தோலகட்டிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்திருந்த ஒரு கூலி உழைப்பாளியை சந்தித்த போது—

சுமார் 100 குடும்பங்களுக்கு மேல் தோலகட்டி செபமாலைத்தாசர் சபை ஆச்சிரமத்தை நம்பி வாழ்ந்தவர்கள்

இன்று அங்கே இராணுவம் நிலை கொண்டுள்ளது. சுற்றுப்புற குடியிருப்புக்கள் எரிக்கப்பட்டுள்ளன

கூலி வேலை செய்தே பழக்கப்பட்ட அப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து செல்ற இடங்களில் பட்டினியால் பரிதவிக்கின்றார்கள்

அவர்கள் இடம் பெயர்ந்த போது எதுவுமே தம்முடன் எடுத்துக் கொண்டு செல்லவில்லை. அப்படிக் கொண்டு போக எதுவுமே அவர்களிடம் இருக்கவில்லை இருந்தவர்களால் கொண்டு போக முடியவுமில்லை.

—என்று தெரிவித்தார்.

செம்மண் பகுதியின் செழிப்பான தோட்டத் தரைகள் பல தங்க நிலங்களாகி காணப்படுகின்றன

ஆங்காங்கே ஷெல் குழிகளும் ஆழமாய்க் கிடக்கின்றன.

எவ்வொருவர் தட்டுப்பாட்டிலும், இராணுவ கெடுபிடிகள் மத்தியிலும் பல விவசாயிகள் தமது தோட்டங்களில் பயிர் செய்திருந்தனர் விடுகளை விட்டு வெளியேறிய போது தமது விளைச்சல் கலையும் விட்டு விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டது

மீறி நின்றவர்கள் ஷெல் அடிக்கு இலக்கானார். அவ்வாறு ஷெல் லடிக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மயிலிட்டிப்பகுதி விவசாயி ஒருவரைச் சந்தித்தபோது அவர் கூறியதாவது:—

ஊர்மக்கள் இராணுவத்துக்குப் பயந்து ஊரை விட்டே வெளியேறி விட்டனர்.

விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கும் விவசாயிகள் வெளியேறி

மக்களின் மனக்கோலங்கள்

எங்கே செல்வது?

ஊரைவிட்டுச் சென்று பட்டினியால் இறப்பதை விட, அதேயே இருந்து இராணுவத்தாக் இறப்பது நல்லது என எண்ணி இடம் பெயராமல் இருந்தோம் என்றார்

விமான நிலைய விஸ்தரிப்புப் பகுதிக்குள்ளும், ஆயிரம் மீற்றர் பிரதேசத்திலுள்ளும் இருந்த இடம் பெயர்ந்தவர்களுக்கு மட்டுமே நஷ்டஈடு வழங்கப்படுகின்றது.

ஷெல் அடிக்கு பயந்தும், இராணுவ நடமாட்டத்திற்கு அஞ்சியும் இடம் பெயர்ந்தவர்களுக்கு நஷ்டஈடு தருகிறார்கள் இல்லை என கவலைப்பட்டார் அவர்.

எஸ். ஜே பி. ரட்ணதுரை

வடபகுதி மக்களின் விலங்கினைப் புரத்தேவையின் பெருமளவை பூர்த்திசெய்யும் பலாலி, மயிலிட்டி கடற்கரைப் பகுதி இன்று வெறிச்சோடிக்கிடக்கின்றது.

கட்டுமரங்கள் யாவும் கரையில் கட்டப்பட்டு அனாதைகள்போல் அநாதரவாகக் கிடக்கின்றன.

ஆங்காங்கே ஒரு சில குடும்பங்கள் மட்டும் சிதறிக் காணப்படுகின்றன.

ஆளரவம் கண்டதும் ஓட்டுக்குள் நுழைவதாலும் சிவிக்கமுடியும். மீனவர்களாகிய எம்மால் எப்படி முடியும்? என்று கேட்டார்.

குரும்பசிட்டிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தமது வீட்டைப் பார்வையிடச் சென்று கொண்டிருந்த ஒருவரை சந்தித்தேன்.

அவர் கொழும்பிக் கணக்காளராகப்பணிபுரிபவர்.

வறுமைப்பட்ட குடும்பத்தில் 4 பெண் சகோதரங்களுடன் பிறந்தவர் அவர்.

அவரது தந்தையார் ஒரு சருட்டுத் தொழிளாளியாக இருந்து கடனை மட்டுமே சேர்த்து விட்டு இறந்தவர்.

மூத்த மகளான இவர் தமது பிரயாசை, படிப்பால் குடிசை விட்டை கல்வியாக்கியவர்.

இன்று அந்த வீட்டுக் கூரைகளும், வெளவால்களுமே குடியிருக்கின்றன.

கண்ணுக்படித்த கவர்களை எரண்டிப்பார்த்திருந்தது துப்பாக்கிச் சன்னங்கள்.

கஷ்டப்பட்டு,வாயைக் கட்டி, வயிறைக்கட்டி, தன் விருப்பங்களுக்கு விறகுவைத்து சேர்த்த பணத்தில் கட்டிய தனது வீட்டை ஒரு கல்லறைப் போல் பதுங்கிப் பதுங்கித் சென்று பார்க்கும் பரிதாபநிலை!

தன் வேதனத்தை மிச்சம்பிடித்து, !தங்கையின் சீதனத்திற்காக கட்டிய வீடு இன்னும் திருமணமாகாத தங்கையின் வாழ்க்கைபோல் பாழடைகின்றதே என்று கலங்கினார்— அந்தக் கணக்காளர்.

*

நீத்தார் புகழாரம்

பெண் கல்விக்கு உதவியவர்

திருமதி சி. பஞ்சாட்சரம் உரும்பராய் மிழக்கில் வாழ்ந்தவர். உரும்பராய் சைவமித்தியாசாலை, உரும்பராய் இந்துக்கல்லூரி, மருதனாமடம் இராமநாதன் கல்லூரிகளில் தமிழ், ஆங்கிலம் நன்கு கற்றவர்.

இரத்மலானை இந்துக் கல்லூரி சதுக்கத்தில் இவர் பத்தாண்டுகள் தொடர்ந்து வசித்த காலத்தில் அக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவிய பணி மகத்தானது. ஆரம்பத்தில் ஆண் பிள்ளைகளே அங்கு கல்வி பயின்றனர். பெண் பிள்ளைகளும் அங்கு கல்வி பயில வேண்டும் என்று முயற்சித்து வெற்றி கண்டவர். தனது பெண் பிள்ளைகளன்றி மற்றும் பல பெண்பிள்ளைகளும் உயர் கல்வி பெறச் செய்து பல்கலைக்கழகம் புகுந்து பட்டம் பெறவைத்த பெருமைக்கு இவர் இலக்காவார்.

ஆதிமார்த்த மேலிட்டால் அரவலர்க்குச் சொல்லியும் குடும்பத்தவர்க்குக் குறிப்பால் உணர்த்தியும் தான் வந்த வேலை முடிந்து விட்டதென்று சிவனோகம் சென்று சேர்ந்தமை மறந்தற்கு அரியது.

-வ. நடராஜா

*

எம்முயிர் டானியலே!

இருண்டுபோன முழுநிலவின்
நினைவுகளாக்
கண்ணீரின் சோகமழை
மாரியாக மாறினதே!

ஆர்கின்ற விடியலுக்காய்
ஆர்வங்கள் மலிந்திட்ட
மகிழ்வான புது வாழ்வின்
பூமாலை போட இங்கே
புத்துலகச் சிற்பிகள்
புறப்பட்ட வேளையிலே
சாகாத வாழ்வொன்று
சாதிக்க விரைந்திட்ட
மக்கள் நலனையே—
இலக்கியச் சக்கரவர்த்தியே—
இலட்சிய வழிகாட்டியே—
எம்முயிர் டானியலே!
வீரியங்கள் இறக்காது
நன்றி உள்ளம் மறக்காது
நாமார்க்கும் குடி அல்லோம்.

வெகுஜன மனிதர்கள்
மீளாத உள் உயிரை
மீளவுமே நெஞ்சிலேற்றி
மக்கள் வாழும் இடமெல்லாம்
மானுடத்தின் மேன்மை சொல்ல
உயிர்ப்பித்தே வைத்துள்ளார்.

நீ, காட்டிய
தர்மமும்-இயக்கமும்
எங்கள் வசம் உள்ளது.
இயக்கம் ஆற்ற - தர்மம் வெல்ல
நீ பதித்த சுவடுகள்
ஆழமும் அகலமுமாக
பாதை விரிந்து நிற்கின்றன
எம்முள்ளும் விழிக்கின்ற
கண்ணீரைத் துடைத்துவிடு
உன்
நடை பயிற்சிக் விழுகொள்ள
நம்பிக்கையோடு காத்திருப்போம்!

—பொன். பொன்ராசா

(எழுத்தாளர் கே. டானியலின் முதலாவது நினைவு தினம் இம்மாதம் 23ஆம் திகதியாகும்.)

தாயகம்

எல். ரி. பி. இராஜேஸ்வரன்

(புலியூற் பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

குறுகிய காலத் திட்டங்களினால் நீர்ப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

(சென்றவாரதொடர்ச்சி)

குடாநாட்டின் நீர் நெருக்கடியை பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

(அ) நன்னீர் மட்டம் குறைவடைதல்

(ஆ) கடல் நீர் உட்புகுதல்.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல மழைநீர் பாறைகளுள் தேங்கும் பொழுது நன்னீர் மட்டம் உயர்வடையும். உவர் நீரிலும் பார்க்க நன்னீர் அடர்த்தி கூடியது. எனவே சூழவுள்ள கடல் நீர் மட்டத்திற்கு மேல் நன்னீர் லென்சு (Lens) வடிவங்கொண்டு தேங்கி நிற்கும்.

நன்னீர் வெளியேற்றம் ஏற்படும் பொழுது இது குறைவடையும் மழைகாலங்களில் நன்னீர் மட்டம் கூடுதலாக இருக்கும். மழைகாலம் முடிவடைய, நீர்மட்டம் குறைவடையும். இது குறைவுபடுவதற்கு பாறைகளுக்கூடாக நீர் கடல் நோக்கி வெளியேறுவதுடன், மனித நடவடிக்கையும் பிரதான காரணமாகும்.

அண்மைக்கால அவதானங்களின்படி மழை முடிவடைந்த ஒரு சில மாதங்களிலேயே நீர் மட்டம் வெகுவாக குறைந்து விடுவது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே வருடத்தின் ஏனைய வரட்சி மாதங்களில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படுகின்றது. குடாநாட்டின் தீவுப்பகுதிகளில் பல வருடத்தின் பெரும் பகுதிகளில் வரட்சியை அனுபவிக்கின்றன. இது குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவுவது சாத்தியம்.

நன்னீர் குறைவடைவதினால் மனித தேவையின் பெரும்பகுதி பிரச்சினைக்குள்ளாகின்றது. விவசாயம், கைத்தொழில்,வீட்டுத்தேவை, சுகாதார நீர் விநியோகம் என்பவை நன்னீரை அடிப்படையாகக்கொண்டவை.

எனவே நன்னீர் மட்டம் குறைவடைதல் முக்கிய இணைகள் உவமானமாக ஒரு பிரச்சினையாகும்.

மிக வேகமான முறையில் தரையில் இருந்து நீர் வெளியேற்றப்படும் பொழுது கடற்பகுதியில் இருந்து பாறைகளினூடாக உள்நாட்டை நோக்கி உவர்நீர் ஊடுருவி வருகின்றது. இதனால் கடற்கரை சார்ந்த அதாவது அண்மிய பகுதிகளில் உவரேற்றம் அல்லது இணைகள் உவர் நிலை அடைகின்றன.

நன்னீர்மட்டம் உவர் நீர் மட்டத்திற்கு கீழ் இறங்கியமையினால் ஏற்பட்ட விளைவே இதுவாகும். மேலும் இந்த உவர்நீர் பாறைப்படுகையினூடாக குடாநாடு எங்கும் பரவலாம். இதனால் பல விளைவுகள் ஏற்படலாம்.

மழை காலங்களில் நீர் கீழ் இறங்கும் பொழுது கனியுப்புக்கள் மேல் இருந்து கீழ் நோக்கி கரைந்து கீழ் இறங்கு கின்றன. கோடை காலத்தில் இவ்வுப்புக்கள் மயிர்த்துளைத்தாக்கம் காரணமாக மேலெழுந்து தரைகளில் படிகின்றன. இதனால் கீழ் இருந்து மேல் நோக்கியும் மேல் இருந்து கீழ் நோக்கியும் அசையும் இவ்வுப்புக்கள், உவர் நீரின் பாறை களினூடான அசைவு அதிகரிக்கும் பொழுது அதிகரிக்கப்படலாம்.

இந்தவகை செயற்பாடு விவசாய நிலங்களை உவரேற்றம் அடையச் செய்வதுடன் நன்னீர்க் கிணறுகளையும் உவராக்கம், சவராக்கம் அடையச் செய்யும். இதனால் குடாநாட்டுப் பகுதியில் விவசாய அறிவு ஏற்படும்.

காலகேசன் கிமெந்து தொழிற்சாலைக்கு அதிக அளவு நீர் உயர் பம்பிகள் மூலம் எடுக்கப்படுவதினால் [illegible] உவர்

"சிக்கனமே சிறந்த செல்வம்"

சிக்கன சலவைக்கு மில்க்வைற் பார் சோப் வாங்கி உபயோகியுங்கள், பெரிய பார் சோப் 12/- சிறிய பார்சோப் 6/- 2 மேலுறைகளை அனுப்பி மில்க்வைற்ச்செய்தி ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

சஞ்சீவி

21 - 03 - 1987 சனிக்கிழமை

சரிபூரண சலவைக்கு மில்க்வைற் நீலசோப்பை வாங்கி உபயோகியுங்கள்
விலை ரூபா 2.00 மட்டுமே!
100 மேலுறைகளைச் சேகரித்து அனுப்பி அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்-யாழ்ப்பாணம்

அமரர் டானியல் நினைவு தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

பிரபல தமிழ் எழுத்தாளரான அமரர் கே. டானியல் நினைவு தினக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

திரு. இ. மார்க்கண்டு வரவேற்பார். 'காணல்' நாவல் அறிமுக உரையை பேராசிரியர் சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

'முரசொலி' ஆசிரியர் திரு எஸ் திருச்செல்வம், கலாநிதி எம். சிவலிங்கராசா, ஜனாப். எம். ஏ. சி. இக்பால், திரு வி. ரி. இளங்கோவன், திரு டானியல் அன்ரனி திரு. பெஞ்ஜமின் ஜேக்கப், திரு. டானியல், செல்வி தாரகா டானியல் ஆகியோர் பேசுவர்.

திரு. பொன். பொன்ராசா, திரு தேவி பாலகிஷ்ணன், பாலஷயூர் தேவதாஸன் ஆகியோர் கவிதாஞ்சலி நிகழ்த்துவர்.

வலிடு நவநந்தகையர் அளிக்கும் 'எடு மண் வெகிடியை' என்ற நாடகமும் மேடையேற்றப்படும்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், மக்கள் கலை இலக்கிய பெருமன்றம் ஆகியன இந்த நிகழ்ச்சியை நடத்துகின்றன. (உ-எ)

ஸ்ரீரங்கம் கும்பாபிஷேகம்

ஸ்ரீரங்கம் ஆலய ராஜகோபுரத்தின் கும்பாபிஷேக நிகழ்ச்சி திட்டமிட்டபடி 25 ஆம் திகதி நடைபெறும்,

அரியலூர் ரயில் விபத்தையடுத்து கும்பாபிஷேக நிகழ்ச்சி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக தமிழ்நாடரசு அறிவித்தது

எனினும் கோயில் நிர்வாகிகளின் விருப்பத்தின்படி இணங்க நிட்டமிட்டபடி கும்பாபிஷேகத்தை நடத்துவது என தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது-

(கும்பாபிஷேகம் தொடர்பான கட்டுரை 8 ஆம் பக்கத்தில்) (உ)

பரீட்சார்த்தி . . .

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

பரீட்சை பெறு பேறுகள் இம்முறை சிறப்பாக அமையவில்லை.

பெறுபேறுகள் திருப்தி அளிக்கவில்லை என்று பரீட்சார்த்திகள் தெரிவித்தனர்.

நேற்று மாலை 4 மணி வரை கல்வித்திணைக்களத்தில் வைத்து பெறுபேறுகள் வழங்கப் பட்டன.

பின்னர் மிகுதியாகிருந்த பெறு பேற்று அட்டவணைகள் தபால் மூலம் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கல்விப் பணிப்பாளர் ஜனாப் மன்சூர் தெரிவித்தார். (உ-7)

ஆர்ஜென்ரீனா கொண்டு...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

செய்யும்படி இலங்கை அரசாங்கத்தை அழைக்கின்றோம்.

4. இந்தப் பிரச்சினை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தொடர்ந்தும் இலங்கை அரசு தகவல்தரும் என்று எதிர்பார்க்கின்றோம்.

பின்குறிப்புத் தகவல்

இலங்கையில் மனித உரிமைகள் நிலை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு நிறைவேற்றிய முதலாவது தீர்மானம் இது ஆகும்.

இலங்கையில் மனித உரிமை நிலை, ஆணைக்குழு உறுப்பினர்களின் தீவிர கவனத்தை சர்க்கும் அளவுக்கு வந்துள்ளது. அந்தக் கவனியை வெளிப்படுத்துவதாகத் தீர்மானம் அமைந்துள்ளது.

மனித உரிமைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் பிரதான ஐ நா வந்தாபனம் தான் மனித உரிமை ஆணைக்குழுவாகும்.

ஆணைக்குழுவில் பல நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அரசாங்கத் தொடர்பற்ற பல தொண்டர் ஸ்த பனங்களும் ஆணைக்குழுவில் அவதானிகளாக அங்கம் வகிக்கின்றன.

புது நூல்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மௌனத்தை, அக்கறை இன்மையைக் களைந்து இப்பணியில் அறிஞர்கள் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும். மக்கள்-வாசகர்கள் அவற்றை வாங்கிப் படித்துப் பயன் பெறுவதோடு நூலாசிரியர்களையும் ஊக்குவிக்க வேண்டும்.

சகல...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மையாளராகக் கடமை யாற்றி வருகிறார்.

இவர் இலங்கை வங்கியிலிருந்து ஓய்வுபெற்றாலும் இலங்கை வங்கி ஊழியரதும், வங்கி வாடிக்கையாளரதும் மனதில் இதயதெய்வமாக என்றென்றும் வீற்றிருப்பார் என்பது முற்றிலும் உறுதியாகும். ✶

இந்தியா வெற்றி

ஹைதராபாத், மார்ச் 20

பாகிஸ்தானுக்கு எதிராக ஹைதராபாத்தில் நடைபெற்ற 3 ஆவது ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் விறுவிறுப்பான இறுதிக்கட்டத்தில் முடிவில் இந்தியா வெற்றிபெற்றது.

இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடி 44 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 212 ஓட்டங்களைப் பெற்றது.

44 ஓவரின் கடைசிப் பந்தில் இந்த ஓட்ட எண்ணிக்கையை சமப்படுத்திய வேளையில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டை இழந்தது

ஒட்ட எண்ணிக்கை சமமாக இருந்ததால் குறைந்த விக்கெட்டுக்களை மட்டும் இழந்த இந்திய அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது!

முதல் இரண்டு போட்டிகளிலும் இந்தியா தோல்வியடைந்திருந்தது (உ)

இந்து அணி சரிந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம் செண். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு எதிரான தினேஷ்பூர்வ கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி அணி 106 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. நேற்று செண் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆட்டம் ஆரம்பமானபோது தடுத்தாட முன்னாந்தில் இந்து அணி துடுப்பாட்டத்தைக் கோட்டைவிட்டது.

தொடர்ந்து ஆடிய செண். ஜோன்ஸ் அணி நேற்றைய ஆட்டம் இடைநிறுத்தப்படும் போது விக்கெட் இழப்பின்றி 13 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இன்றைய ஆட்டம் காலை 8-45 இற்கு ஆரம்பமாகும். (உ-7)

திருமலையில் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

அனுப்பி வைக்கப்பட்டனர்.

அதன் பின்னர் பல பொதுமக்கள் கட்டுக் கொலைப்பட்டனர் என்றும் பல வீடுகள் எரிக்கப்பட்டன என்றும் அறிகிருந்து வந்த செய்திகள் தெரிவித்தன.

காலை முதல் நண்பகல் வரை அப்பகுதியில் சரமாரியான வெடிச்சத்தங்கள் கேட்டதாக கிண்ணியாவாசிகள் தெரிவித்தனர்.

இரண்டாவது சம்பவம்

திருமலை - அனுராதபுரம் வீதியில் கிந்தல் ஊற்று பகுதியில் இரண்டாவது சம்பவம் இடம் பெற்றது.

அங்கு யோராவிடம் நடத்திய தாக்குதலில் பி. டி. விஜயசிங்க (வயது 24) என்ற சிப்பாய் உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து கும்புறுபிட்டியில் இருந்த மேலதிக இராணுவத்தினர் அங்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

மறு நாள் இவ்விதி ஊடாக யாழ் செல்ல இருந்த பஸ்ஸும் நிறுத்தப்பட்டது குப்புறுபிட்டி பாலத்துக்கு அப்பால் பொது மக்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இந்த இரண்டு சம்பவங்களும் இம் மாதம் 13 ஆம் திகதி ஒரே சமயத்தில் இடம்பெற்றன.

உயிரிழந்த இரண்டு சிப்பாய்களின் சடலங்களும் ஹெலிகொப்டர் மூலம் திருமலை கடற்படை தளத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

மரண விசாரணையின் பின்னர் கொண்டு என்று பதில் நீதிவான் தீர்ப்பளித்தார். (உ-எ-150)

தினேஷ் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

✶ முதலாவது:- இலங்கை இராணுவத்திடம் யாழ் குடா வீழ்ச்சி அடைவதை இந்தியா பார்த்துக்கொண்டிருக்காது

✶ இரண்டாவது:- இடைநிறுத்தம் செய்யப்பட்ட இந்திய மத்தியஸ்தத்தை மீண்டும் தொடரும்படி இந்தியாவை இலங்கை அரசு பிரேரிக்க வேண்டும்.

✶ மூன்றாவது:- இலங்கை அரசியலில் இந்திய மத்தியஸ்தம் குறித்து என்ன கருத்து நிலவுகிறது என்பதை ஜனாதிபதியிடமிருந்து அறிந்து கொள்வது

தினேஷ்சிங் இம் மூன்று அம்சங்களையும் திரு. ஜெயவர்த்தனாவிடம் தெரிவித்தார்.

திரு ஜெயவர்த்தனா இவற்றிற்குப் பதிலளித்தார். அவை வருமாறு:

1. சட்டபூர்வமான ஒரு அரசு தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க உரிமையுடையது. இருந்தாலும் தீவிரவாதிகள் சண்டையை நிறுத்தினால் அரசப் படைகளும் சண்டையை நிறுத்தும்.

2. இந்தியா தன்னிச்சையாகவே மத்தியஸ்தப் பணியை இடைநிறுத்தியது ஆனால் இந்திய மத்தியஸ்தத்தை இலங்கை வரவேற்கிறது.

இடம், நேரம், தமிழர் தரப்பில் இருந்து பங்கு பெறுவோரின் பட்டியல் இவற்றை இந்தியா தெரிவித்தால் இலங்கை பேச்சுக்களில் பங்குபற்றத் தயாராக உள்ளது

3. இந்திய மத்தியஸ்தம் குறித்து இலங்கை அரசியல் கட்சிகள் அதிருப்தி கொண்டுள்ளன.

இந்திய மத்தியஸ்தத்தின் நம்பகத்தன்மையில் அரசியல் கட்சிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இப்படி திரு. ஜெயவர்த்தனா தெரிவித்தார் என்று கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன

இலங்கை - - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ராஜீவ், முன்னாள் அமைச்சரும், இப்போதைய எம் பியுமான திரு. தினேஷ்சிங் கைத் தமது சிறப்புத் தூதுவராகக் கொழும்புக்கு அனுப்பியிருந்தார்.

திரு தினேஷ்சிங் இம் மாதம் பதினாலாம் திகதி கொழும்பு வந்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுடன் பேசிவிட்டு அடுத்தநாள் தாயகம் திரும்பினார்.

திரு. ஜெயவர்த்தனாவுடன் பேசப்பட்டது என்ன, அவரது நிலை என்ன என்ற விவரங்கள் குறித்துப் பிரதமர் ராஜீவ் இன்றைய அரசியல் விவகார ஆலோசனைக் கூட்டத்தில் வெளியிடுவார்.

அதனைத் தொடர்ந்து சகல சாதக பாதகங்களும் நுணுக்கமாக ஆராயப்பட்டு ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படும்.

இலங்கை அரசின் கடைசிநிலை என்னவென்று தெரிந்துவிட்டதால் இனி இந்தியா ஒரு முடிவுக்கு வரும். அந்நமுடிவு ஆனேகமாக இன்றைக்கே எடுக்கப்படலாம்.

இலங்கை விவகாரத்தை பிரதமர் ராஜீவ் காந்தியே நேரடியாகக் கையாள்கிறார் என்பதால் இன்று எடுக்கப்படும் முடிவு முக்கியமானதாக அமையலாம் -இவ்வாறு அரசாங்க வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. (உ-எ)

இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

ராஜன் கதிர்காமர் வெற்றிக்கிண்ண மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்போட்டி இன்று நடைபெறுகிறது.

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் இந்த ஆட்டத்தில் நேரடியாக மோதுகின்றன. (உ-7)

மோட்டார் சைக்கிள்
சிடி 200ரக மோட்டார் சைக்கிள் தேவை விண்ணப்பிக்க.
பெட்டி இல: 60
C/o. உதயன்,
யாழ்ப்பாணம்.

பாதுகாப்பான வெண் சலவைக்கு
தேசிக்காய் வாசனையுடன்
எம்டீ சோப்
எம்டீ என்டர்பிறைஸஸ். அச்சுவேலி.

நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கைவங்கியின் 18-03-87ஆம் திகதிய மாற்று விகிதமாகும்).

வெளிநாட்டு நாணயம்	இலங்கையில் (ரூபா சதத்தில்)
ஸ்ரேலிங் பவுன்	45. 72
அமெ. டாலர்	28. 62
இந்திய ரூபா	2. 19
ஜேர்மன் மார்க்	15. 52
கனடா டாலர்	21. 52
பிரான் (பிரெஞ்சு)	4. 66
பிரான் (சுவிஸ்)	18. 39
அவுஸ். டாலர்	19. 46

ராஜீவின் பலத்தை...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பது இரு கட்சிகளின் போக்கிலேயே தங்கி இருக்கிறது.

ஏற்கனவே தேசிய பேரவைக் கமிசியின் அதிருப்தியாளர் சோஷ்டித் தலைவர் ஷாவை அணைத்துக் கொண்டு பாரூக் அப்துல்லாவின் ஆட்சியை வீழ்த்தியவர்கள் இந்திரா காங்கிரஸ்காரர்கள்.

பின்பு அதே ஷாவின் அரசியல் வீழ்ச்சிக்கும் இந்திரா காங்கிரஸே காரணமாக இருந்துள்ளது.

தற்போது மீண்டும் பாரூக் அப்துல்லாவை அணைத்துக் கொண்டு கூட்டணி அமைத்து இந்திரா காங்கிரஸ் போட்டியிடுகிறது

ஜம்மு காஷ்மீரில் மொத்தம் 76 சட்டசபைத் தொகுதிகளில் பாரூக் அப்துல்லா தலைமையிலான தேசிய பேரவைக் கட்சி 45 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இந்திரா காங்கிரஸ் 31 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

பாரதிய ஜனதாக் கட்சி இக் கூட்டணிக்கு எதிரான பிரதான கட்சி ஆகும்.

இந்திரா காங்கிரஸினதும் தேசிய பேரவைக் கட்சியினதும் அரசியல் சந்தர்ப்ப வாதத்தைக் கட்டிக்காட்டி பாரதிய ஜனதாக்கட்சி பிரசாரம் செய்து வருகிறது.

மேற்கு வங்காளம்

திங்கட்கிழமை நடைபெறும் மேற்கு வங்காள சட்ட சபைத் தேர்தலில் தற்போது ஆட்சியில் உள்ள மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியே மீண்டும் அதிகாரத்துக்கு வர வாய்ப்பு இருந்து வருகிறது.

தற்போதைய தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் இந்திரா காங்கிரஸ் மிகவும் பின்னுக் தள்ளப் பட்டிருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

மேற்கு வங்காளத்தில் ஜனத்தொகையில் 20சத வீதமானோர் முஸ்லிம்கள்.

எனினும் பிரதேச இந்திரா காங்கிரஸ் தலைவர் பிரிய ரஞ்சன் டாஸ் முன்ஷி வேட்பாளர் பட்டியலில் கணிசமான அளவு முஸ்லிம்களுக்கு இடம் அளிக்கத் தவறிவிட்டார் என்று குற்றச் சாட்டுக்கள் தெரிவிக்கப் பட்டு வருகின்றன

மேற்கு வங்காளத்தின் பிரசிடென்சிக்குரிய பகுதியாகக் கருதப்படும் டார்ஜீலிங் பிரதேசத்தில் உள்ள சுபாஷ் கிஷிங் ஆதரவாளர்கள் தேர்தலைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளனர்.

ஜோதிபாசு தலைமையிலான மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் நிலையில் இருந்து வருகிறது ✶

முதலாவது பிறந்த தின வாழ்த்து

செல்வன் ஜீவிதன்

சுட்டப்பிராய் குளக்கண்டி வேலைச் சேர்ந்த விஜயரட்ணம் ஞானரஞ்சிதம் தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜீவிதன் இன்று (21-3-87) தனது இல்லத்தில் முதலாவது பிறந்தநாளை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை சலுதி விருக்கும் அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, ஜேர்மனியில் இருக்கும் மாமா, உற்றார், உறவினர் பல்கலையும் சற்ற பல்லாண்டு நலம்பெற்று வாழ வாழ்த்துகின்றார்கள்

வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு 1987
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜோ விஸ்ரார்ஸ் லியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி

வீரரின் பெயர் _____
கல்லூரி _____
வாக்காளர் பெயர் _____
விலாசம் _____
ஒப்பம் _____

A/L 89 பிரிவு ॥ (விஞ்ஞான பாடங்கள்)
ஆரம்பம்:- 28-03-87 சனிக்கிழமை காலை 7. 30 மணி (எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)
NEW MASTER INSTITUTE
B M. C. LANE, JAFFNA.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை இல. 15 இல் அமைந்துள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 21-03-1987. தொலைபேசி இல: 24805, 22073.
printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane Power House Road, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org